இயல் ஐந்து

# ஊடகவியல்

## இதழியல்




உலகின் பல்வேறு இடங்களில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகளை மக்களுக்குக் கொண்டு செல்லும் தொடர்புச் சாதனமே ஊடகம் . ஊடகத்தை அச்சு, காட்சி, கேள்வி மற்றும் இணையவழி ஊடகங்களாக வகைப்படுத்தலாம்.

இப்பாடப் பகுதியில் அச்சு ஊடகமான இதழ்கள் சமுதாயத்திற்கு ஆற்றிவரும் பணிகள், இதழ்களின் மொழிநடை, அதன் வகைகள், இதழியல் சார்ந்த செய்திகள், மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள், சிறந்த இதழியல் ஆளுமைகள் குறித்த தகவல்கள், ஊடகத்துறையில் பணியாற்ற விழைவோர்க்கான வழிகாட்டுதல்கள், ஆகியவை அமைந்துள்ளன.

### கற்றல் நோக்கங்கள்

- **இதழியலின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்.**
- **சமூக மேம்பாட்டிற்கு இதழ்களின் பங்களிப்பைப் புரிந்து கொள்ளுதல்.**
- **இதழ்களில் பயன்படுத்தப்படும் மொழிநடையை அறிந்து, தம் படைப்புகளில் பயன்படுத்துதல்.**
- **நிகழ்வுகளைச் செய்தியாக்கவும் கையெழுத்து இதழ் உருவாக்கவும் திறன் பெறுதல்.**
- **ஊடகவியல் துறையின் தமிழ் ஆளுமைகளைத் தெரிந்துகொள்ளுதல்.**

### பாடப் பகுதி

- இதழ்களின் அமைப்பு முறை
- தமிழ் இதழ்கள் – ஒரு சந்திப்பு
- சமுதாய முன்னேற்றத்தில் இதழ்கள்
- ஊடகவியலில் தமிழ் ஆளுமைகள்



11th Advance Tamil - FINAL.indd 179 14-02-2019 17:28:21

இயல் ஐந்து

கட்டுரை

# இதழ்களின் அமைப்புமுறை

### ஊடகம்

உலகின் பல்வேறு இடங்களில் நாள்தோறும் நடைபெறும் நிகழ்வுகளை மக்களுக்குக் கொண்டுசெல்ல உதவும் கருவிகளே ஊடகங்கள். இவற்றை அச்சு, காட்சி, கேட்பு, இணையவழி ஊடகங்கள் என வகைப்படுத்தலாம். செய்திப் பதிவுகளையும் படங்களையும் உள்ளடக்கிய இதழ்களே அச்சு ஊடகங்கள். நிகழ்வுகளைக் காணொளிகளாக ஒளிபரப்பும் தொலைக்காட்சி, காட்சி ஊடகம். நிகழ்வுகளை உரை வடிவங்களாக ஒலிபரப்பும் வானொலி, கேட்பு ஊடகம். இன்றைய அறிவியல் வளர்ச்சியினால் அச்சு, காட்சி, கேட்பு ஆகிய ஊடகப்பதிவுகளை இணையவழி ஊடகம் ஒருங்கிணைக்கிறது . இவை அனைத்தின் வழியாகவும் செய்திகள் மக்களைச் சென்றடைகின்றன.

### இதழ்கள்

நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் இதழ்கள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. இதனால் பாரதிதாசனும்,

*காரிருள் அகத்தில் நல்ல*
*கதிரொளி நீதான்! இந்தப்*
*பாரிடைத் துயில்வோர் கண்ணில்*
*பாய்ந்திடும் எழுச்சி நீதான்*
*ஊரினை நாட்டை இந்த*
*உலகினை ஒன்று சேர்க்கப்*
*பேரறி வாளர் நெஞ்சில்*
*பிறந்த பத்திரிகைப் பெண்ணே!*

என்று இதழ்களின் பெருமையைப் பாடுகிறார்.

### இதழ்களின் வகைகள்

நாள்தோறும் வெளியாகும் செய்தித்தாள்களை நாளிதழ்கள் எனவும் காலமுறைப்படி வெளியாகும் இதழ்களைப் பருவ இதழ்கள் எனவும் வகைப்படுத்தலாம். பருவ இதழ்கள் வாரம், வாரமிருமுறை, மாதம், மாதமிருமுறை, காலாண்டு, அரையாண்டு, ஆண்டு எனக் கால இடைவெளியை வரையறுத்துக்கொண்டு வெளிவருகின்றன.

### நாளிதழ்கள்

நாளிதழ்கள், நாள்தோறும் காலை இதழ், மாலை இதழ் என இருவகையாக வெளிவருகின்றன. அவை, உலகெங்கும் நிகழும் நிகழ்ச்சிகளை நாள்தோறும் மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன. நாளிதழ்களை உருவாக்குவதில் செய்தியாளர்கள், இதழாசிரியர்கள், பதிப்பாளர்கள், முகவர்கள் ஆகியோர் இன்றியமையாப் பணியாற்றுகின்றனர்.

### பருவ இதழ்கள்

பருவ இதழ்கள், நாட்டு நடப்புகளை விவரித்து எழுதுகின்றன. இவை பல்வேறு துறை சார்ந்த பருவ இதழ்களாக உள்ளன. எடுத்துக்காட்டாக இலக்கிய இதழ்கள், அறிவியல் இதழ்கள், வேளாண் இதழ்கள், கலை இதழ்கள், சிறுவர் இதழ்கள், மகளிர் இதழ்கள், சமய இதழ்கள், சோதிட இதழ்கள், அரசியல் இதழ்கள், கல்வி இதழ்கள் ஆகியவற்றைச் சுட்டலாம்.

### செய்தித்திரட்டும் வெளியீடும்

செய்திகளைத் திரட்டுபவர்கள், செய்தியாளர்கள். இவர்களை நிருபர்கள் எனவும் அழைக்கின்றனர். இவர்கள்



11th Advance Tamil - FINAL.indd 180 14-02-2019 17:28:21

தங்கள் பகுதிசார்ந்த அரசு செயல்பாடுகள், மக்களின் தேவைகள், குறைகள், விபத்து, சமூக நிகழ்வுகள், வானிலை அறிக்கைகள், அறிவியல்சார் நிகழ்வுகள், அறிவிப்புகள், குற்றங்கள் எனப் பல செய்திகளைத் திரட்டித் தங்களுடைய அலுவலகத்திற்கு உடனுக்குடன் அனுப்பி வைப்பர். செய்தியாளரால் திரட்டப்பட்ட செய்திகள், செய்திப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு, முதன்மைப் பதிப்பாசிரியராலும் ஆசிரியர் குழுவாலும் செம்மைப்படுத்தப்பட்டு வெளியிடப்படுகின்றன.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மக்கள் செய்தித்தொடர்பு அலுவலகம், நீதிமன்றங்கள், மருத்துவமனைகள், காவல் நிலையங்கள் ஆகியவை முதன்மைச் செய்திக் களங்களாகக் கருதப்படுகின்றன. செய்தியாளர்கள், செய்தி திரட்டுவதற்காக எல்லா இடங்களிலும் பம்பரமாய்ச் சுழல்வார்கள். எனவேதான், புகை நுழையமுடியாத இடத்திலும் செய்தியாளர்கள் நுழைந்துவிடுவர் என்னும் சொல் வழக்கு ஏற்பட்டது.

## இதழ் உருவாக்கம்

இதழாசிரியர்கள், செய்திகளின் முதன்மை கருதி எந்தச் செய்தியை எந்தப் பக்கத்தில் வெளியிடுவது என்று முடிவு செய்து இதழை வடிவமைப்பர். இதழ் சிறப்பான முறையிலும் குறித்த நேரத்திலும் வெளிவர வேண்டுமெனில் மாதிரித் திட்ட வரைவினை உருவாக்குவர். இந்த மாதிரித் திட்ட வரைவைச் செய்தியின் கட்டமைப்பு முறை என்பர். செய்தியின் மதிப்பை உயர்த்துவதில் இக்கட்டமைப்பு முறைசிறப்பான இடத்தைப் பெறுகிறது. படிப்பவர்களின் உள்ளங்களைக் கவரும்வண்ணம் இதழ் கட்டமைப்பு இருத்தல் வேண்டும். ஒரு செய்தியின் வலிமையான கட்டமைப்பை நான்கு காரணிகள் உறுதிசெய்கின்றன. அவையாவன:

1. செய்தி எழுதுவதற்குக் கிடைக்கும் நேரம்.
2. செய்தியின் உருவ அமைப்பு.
3. செய்தித்தாளில் அவற்றை வெளியிடுவதற்குக் கிடைக்கும் இடம்.
4. செய்தி எழுதுபவரின் திறமை .

## செய்தியின் பகுதிகள்

செய்தித்தாளில் வெளிவருகின்ற ஒரு செய்தி தலைப்பு, முகப்பு, செய்தி விளக்கம் ஆகிய மூன்று பகுதிகளைக்கொண்டு அமைகிறது.

### 1. தலைப்பு

செய்தியின் தலைப்பு, பெரிய எழுத்துகளில் அச்சிடப்பட்டிருக்கும். இது படிப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையிலும், படித்தவுடன் செய்தியை உணரும் வகையிலும் இருக்கும். தலைப்புகள் ஒரு செய்தித்தாளுக்கு வடிவ அமைப்பையும் அழகையும் கொடுக்கின்றன.

**தமிழ்நாடு மின் வாரிய இணையதளம் புதுப்பிப்பு**

● தகவல்களை விரைவாகப் பெற முடியும்

### தலைப்பின் நோக்கம்

"இதழ்களை, அவற்றில் இடம்பெறும் தலைப்புகளே துல்லியமாகக் கணிக்கின்றன" என்று ஆலன் ஹோம் கோம்ப் கூறுகிறார். செய்தித் தலைப்பைச் செய்தித் தாளின் பலகணி என்பர். செய்தியின் சிறப்புத்தன்மைகளைக் கூறுதல், இன்றியமையாமையை உணர்த்துதல், படிப்பவர்களைக் கவர்தல், விற்பனையை உயர்த்துதல் ஆகியவை தலைப்பின் நோக்கங்களாகும்.

**அறிவோம் தெளிவோம்**

**மக்களாட்சியின் நான்காவது தூண்**

'ஊடகம் மக்களாட்சியின் நான்காவது தூண்' என அழைக்கப்படுகின்றது. முதல் தூணாக அரசு நிருவாகமும் இரண்டாவது தூணாகப் பாராளுமன்றமும் சட்டமன்றமும் மூன்றாவது தூணாக நீதிமன்றமும் நான்காவது தூணாக ஊடகமும் குறிப்பிடப்படுகின்றன. மக்களின் அடிப்படை உரிமையான கருத்துரிமையைக் காத்தல், சமூகக் குற்றங்களை எதிர்த்தல், அரசுக்கு வழிகாட்டுதல், ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செய்திகளை வழங்குவதால் ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது.

## தலைப்பின் வகைகள்

### 1. கூம்புத் தலைப்பு

கோபுர அமைப்பில் முதல் வரி சிறியதாகவும் தொடரும் வரிகள் அதனைவிட நீளமானவையாகவும் இருக்கும்.

### 2. தலைகீழ்க் கூம்புத்தலைப்பு

தலைகீழ்க்கோபுரம்போல இருக்கும்.

### 3. இடப்பக்கம் தள்ளிய தலைப்பு

இடப்பக்கம் தள்ளியதாகத் தலைப்பு இருக்கும்.

### 4. வலப்பக்கம் தள்ளிய தலைப்பு

வலப்பக்கம் தள்ளியதாகத் தலைப்பு இருக்கும்.

### 5. உடுக்குத் தலைப்பு

உடுக்கையின் உருவம்போலத் தலைப்பு இருக்கும்.

இவ்வாறு பலவகையான தலைப்பு வடிவங்கள் செய்தித்தாளில் இடம்பெறும்.

### 2. முகப்பு

தலைப்பைத் தொடர்ந்து இடம்பெறுவது முகப்பு. இதில் ஒரு செய்தியின் முதன்மையான உள்ளடக்கம் ஓரிரு சொற்றொடர்களில் அமையும்.

### முகப்பின் தன்மை

செய்தியின் முகப்புப் பகுதி, சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் இருத்தல் வேண்டும். இது செய்திக்கு உயிரோட்டம் தருகிறது; படிப்பவர்களின் ஆவலையும் தூண்டுகிறது.


இந்திய அஞ்சல் துறை
இணையத்தள வங்கி சேவை

நாடு முழுவதும் மார்ச் மாதத்தில் அமல்படுத்த முடிவு

**தமிழ்**
**ஊடகங்களில்**
**பணியாற்ற ஆசையா?**

**தமிழ் ஊடகங்களில்**
**பணியாற்ற**
**ஆசை**

**ஊடகங்களில் பணியாற்ற**
**ஆசையா?**

**ஊடகங்களில் பணியாற்ற**
**ஆசையா?**

**கணித்தமிழ் வழியாகக்**
**கன்னித்தமிழ்**
**பெருமையைக் காப்போம்**

### செய்தி விளக்கப்பகுதி

செய்தியின் தலைப்பையும் முகப்பையும் எழுதிய பிறகு, செய்தியின் விளக்கப்பகுதியை எழுத வேண்டும். செய்திகள் தொடக்கம், இடை, இறுதி என்று மூன்று நிலைகளில் அமைதல் வேண்டும்.

செய்தியின் விளக்கப்பகுதியை எழுதுவதற்குமுன்னால் மூன்று குறிப்புகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். முதலாவதாகச் செய்தியை முழுமையாகப் படித்து, படிப்பவர்களுக்கு எவை தேவை என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக செய்திக்குத் தேவையான எல்லா விவரங்களும் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். மூன்றாவதாகச் செய்தியை எவ்வளவு விரைவாகக் கூற முடியுமோ அவ்வளவு விரைவாகக் கூற வேண்டும்.



11th Advance Tamil - FINAL.indd 182 14-02-2019 17:28:21

செய்தியின் விளக்கப்பகுதி, செய்தியைப் பொருள் மயக்கமின்றி உணர்த்துவதாகவும் புதுமையாகவும் சுவையூட்டுவதாகவும் விறுவிறுப்பாகவும் அமைவதன் மூலம் செய்தியின் மதிப்பு கூடுகிறது.

### பக்க அமைப்புமுறை

செய்தித்தாளில் இடம்பெற வேண்டிய செய்திகள், எந்தெந்தப் பக்கத்தில் எந்தெந்த இடத்தில் எப்படி அமைய வேண்டுமெனத் தீர்மானிப்பது, பக்க வடிவமைப்பு. செய்தித்தாளின் அனைத்துப் பக்கங்களும் மிகவும் இன்றியமையாதவையாக இருப்பினும், முதற்பக்கம் சிறப்பானதாகவும் பொலிவுடையதாகவும் அமைந்திருக்கும். முதற்பக்கத்தில் முதன்மையான அரசியல் செய்திகள், உள்ளத்தை உருக வைக்கும் நிகழ்வுகள், வண்ணப்படங்கள் போன்றவை இடம்பெற்றுப் படிக்கும் ஆவலைத் தூண்டும் விதமாக அமைந்திருக்கும். செய்தித்தாளை அச்சிடுவதற்கு முன்புவரை கிடைக்கக்கூடிய (கடைசி நேரச் செய்திகள்) இன்றியமையாத செய்திகள், முதற்பக்கத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கும். மற்ற பக்கங்கள் முன்பே முழுமையாக முடிக்கப்பட்டிருக்கும். செய்திகளை வழங்குவதன் அடிப்படையில் செய்தித்தாள் மூவகைப் பக்க அமைப்பைக் கொண்டுள்ளது.

### 1. சமநிலைப் பக்க அமைப்பு

முறையான ஓர் அமைப்பில் செய்திகள், படங்கள், கேலிச்சித்திரங்கள், துணுக்குகள், விளம்பரங்கள் ஆகியவற்றை ஒரே சீராக அமைப்பது.

### 2. மாறுபட்ட பக்க அமைப்பு

ஒரு பக்கத்தைச் சமநிலையில் அமைக்கின்றபொழுதே இடையிடையே மாறுபட்ட முறைகளில் செய்திகளையும் படங்களையும் அமைப்பது.

### 3. கலப்புநிலைப் பக்க அமைப்பு

சமநிலைப் பக்க அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைப்பது கலப்பு நிலைப் பக்க அமைப்பு. இதில், செய்திகள் மற்றும் உள்ளடக்கங்கள் இடம்பெறும் பக்கங்கள் ஒவ்வொரு நாளும் மாறுபடலாம்.

**சமநிலைப்பக்க அமைப்பு**



### பக்க அமைப்பின் நோக்கங்கள்

படிப்பவர்களைக் கவர்தல், செய்தியின் இன்றியமையாமையைக் காட்டுதல், படிப்பதற்கு ஏற்றவாறு அமைத்தல், சுவை கூட்டுதல், இதழை இனம் காட்டுதல், விரும்புவதைப் படிக்கச் செய்தல், பயனை மதிப்பிட உதவுதல், மிகுதியான செய்திகளைப் படிக்க வாய்ப்பளித்தல் முதலியன பக்க அமைப்பின் நோக்கங்களாகும்.

### பத்தி அமைப்பு

இதழ்களில் பத்திகள் ஐந்து செ.மீ. நீளத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். ஒரு பத்திக்கும் இன்னொரு பத்திக்கும் தொடர்பு இருக்கவேண்டும். இரண்டு பத்திக்குமிடையே தொடர்பு விட்டுப்போகுமிடத்தில் துணைத் தலைப்பிட்டு இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

### படங்கள்

நாளிதழ் வனப்பையும் செய்தி மதிப்பையும் கூட்டுவனவாகப் படங்கள் உள்ளன. ஆயிரம் சொற்களால் சொல்ல முடியாதவற்றை ஒரு படம் உணர்த்திவிடுகிறது. கற்றோர், எழுத்தறிவற்றோர், முதியோர், சிறுவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் பார்த்துச் செய்திகளைப் புரிந்துகொள்ளப் படங்கள் உதவுகின்றன.

### இதழ்களின் மொழிநடை

ஓர் இதழுக்குச் சிறப்பு சேர்ப்பனவற்றுள் முதன்மையானது, அதனுடைய மொழி நடையாகும். சிறப்பான மொழிநடை மக்களை வெகுவாக ஈர்க்கிறது. நாம் மற்றவர்களோடு பேசுவதற்குப் பயன்படுத்துவது பேச்சுத் தமிழாகும். விளம்பரத்திற்காகக் கையாளும் தமிழ், அழகாகவும் செறிவாகவும் இருக்கும். மேடை ஏறி முழங்கும் பேச்சாளர்கள் சிலர், பயன்படுத்தும் நடை இலக்கிய நயத்துடன் இருக்கும்.

மொழிநடை பொருளுக்கேற்பவும் வேறுபடுகிறது. பெரும்புலவர்கள் எழுதுகின்ற இலக்கியக் கட்டுரைகள் சொற்செறிவுடன் அமைந்திருக்கும். இதழ்களில் இடம்பெறும் புனைகதைகளில், அணி சேர்க்கும் அடைமொழிகளும் உவமைகளும் கையாளப்படும். சிறுகதைகளில் சொற்கள் சிக்கனமாகப் பயன்படுத்தப்படும். இதுபோலவே படிக்கத்தெரிந்தவர்கள் அனைவரும் எளிதாகப் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் இதழ்களில் மொழிநடை அமைந்திருக்கும்.

### தலையங்க மொழிநடை

நாளிதழ், பருவ இதழ்களில் தலையங்கம் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. நடைமுறையில், தலையங்கம் இதழின் தரத்தை உயர்த்துகின்றது. தலையங்கம், செய்தித்தாளின் சமூகப் பார்வையையும் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

### தலையங்கத்தின் இயல்புகள்

தலையங்கம், ஓர் இதழின் கருத்துக் கண்ணாடி ஆகும். இதனை எழுதும்

**அறிவோம் தெளிவோம்** — **திரு.வி.க. வின் தமிழுணர்வு**

1. 'தேசப்பிதா காந்திஜி' யை முதன்முதலில் காந்தியடிகள் என்று குறிப்பிட்டு இதழ்களில் திரு.வி.க எழுதினார். சிலப்பதிகாரத்தில் வரும் கௌந்தியடிகளைப் படிக்கும்போது காந்தியை, காந்தியடிகள் என்று குறிப்பிட வேண்டுமென்று தோன்றியதாகத் தமது நவசக்தி இதழில் எழுதியுள்ளார்.
2. அன்னிபெசண்ட் அவர்களை 'அன்னை வசந்தை' என்றே அவர் எழுதினார்.
3. 'வல்லரசு' என்ற புதிய அரசியல் பதத்தை முதன்முதலில் அவர் உருவாக்கினார்.
4. சட்டசபையில் ஆங்கிலமே பேசப்பட்டு வந்த நிலையில் சேலத்தைச் சேர்ந்த பி.வி. நரசிம்மன் என்பவர் முதன்முதலில் தமிழில் பேசியதை எந்த இதழும் வெளியிடாத நிலையில் தமது தேசபக்தன் இதழில் வெளியிட்டார்.



11th Advance Tamil - FINAL.indd 184 14-02-2019 17:28:22

ஆசிரியர், தம் பொறுப்பினை உணர்ந்து எழுதவேண்டும். எதனைப் பற்றித் தலையங்கம் எழுதினாலும் தரவுகளைத் திரட்டிவைத்துக்கொண்டு நடுநிலையோடு எழுதுதல் வேண்டும். கட்டுரையைப்போல் விரிவாக இல்லாமல் சுவையாகவும் சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைவது, தலையங்கத்திற்குச் சிறப்பைத் தரும். சிறந்த தலையங்கங்கள் பொருளுக்கேற்பத் தெளிவான நடையில், வலுவான கருத்துகளைக்கொண்டு அமைந்திருக்கும். ஒரு கொள்கை / கருத்தின் மீதான செய்தித் தாளின் நிலைப்பாட்டை இதன் மூலம் அறியலாம்.

### இடம்பெறும் பிற செய்திகள்

இதழ்கள், நடப்புச்செய்திகளை வெளியிடுவதோடு அல்லாமல் கருத்துப்படம், நூல் மதிப்புரை, வாசகர் கடிதம், விளம்பரம் முதலிய பகுதிகளுக்கெனக் குறிப்பிட்ட பக்கங்களில் இடங்களை ஒதுக்கி அவை தொடர்பான செய்திகளை வெளியிடுகின்றன.

### நூல் மதிப்புரை

நூல் மதிப்புரை என்பது, ஒரு நூலைப்பற்றிய திறனாய்வாகும். இது நாளிதழ்களில், ஒரு வாரத்தின் குறிப்பிட்ட நாளில் வெளியிடப்படுகிறது. இப்பகுதியில் புது நூல்களின் வரவு குறித்த அறிமுகங்கள் இடம்பெறும். சிறப்பான உள்ளடக்கங்கள் கொண்ட நூல்கள் குறித்து மதிப்புரைகள் எழுதப்படும். நூலின் விலை, கிடைக்குமிடம் ஆகிய விவரங்களும் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

### வாசகர் கடிதம்

வாசகர் கடிதம் என்ற பகுதி, படிப்பவர்களின் பின்னூட்டங்களைப் பதிவு செய்யும் ஒரு களமாக விளங்குகிறது. செய்திகள், பிற படைப்புகள் ஆகியவை வாசகர்களிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் அல்லது மறுப்புகள் இப்பகுதியில் வெளியிடப்படுகின்றன. வாசகர் கடிதம், அடுத்தடுத்து வரும் செய்திகளைச் செம்மைப்படுத்திக்கொள்ள இதழ்களுக்கு உதவுகிறது. மேலும், இப்பகுதி தீவிரமான அரசியல், சமூகச் சிக்கல் ஆகியவற்றைக் குறித்துக் கலந்துரையாடும் திறந்த மேடையாகவும் விளங்குகிறது.

### விளம்பரம்

எந்த இதழைப் புரட்டினாலும் அதன் விற்பனை அளவிற்கும் புகழுக்கும் ஏற்ப விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருப்பதைக் காணலாம். விளம்பரம் என்பது, படங்கள் மற்றும் கவர்ச்சியான வாசகங்களைப் பயன்படுத்திப் பொருள்களை வாங்க மக்களைத் தூண்டும் முறையாகும். இதழ்களில் பல வகையான விளம்பரங்கள் வெளிவருகின்றன.

வணிக விளம்பரம், நிறுவன விளம்பரம், அறிவிப்பு விளம்பரம், தொழில் விளம்பரம், அரசு விளம்பரம், பங்குச்சந்தை விளம்பரம் போன்ற விளம்பரங்களை நாளிதழ்களில் காணலாம்.

### இணைப்பு இதழ்கள்

தற்காலத்தில் ஒவ்வொரு நாளிதழும் வாரத்தின் ஏழு நாளிலும் ஒவ்வொரு வகையான இணைப்பிதழை வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக சிறுவர் இதழ், அறிவியல் இதழ், மருத்துவ இதழ், கல்வி இதழ், பெண்கள் இதழ், தொழில் இதழ், வணிக இதழ், விளையாட்டு இதழ், இளைஞர் இதழ், சோதிட இதழ், சமய இதழ், வேலைவாய்ப்பு இதழ் முதலியவற்றைக் கூறலாம்.

### பருவ இதழ்களின் அமைப்பு

பருவ இதழ்களில் அறிஞர்களின் நேர்காணல்கள், நடப்பு நிகழ்வுகள், கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள், உடல்நலம், வேளாண்மை, வேலைவாய்ப்பு மற்றும் திரைப்படச் செய்திகள் போன்றவை படிப்பவர்களின் மனத்தைக்

**உங்கள் பார்வைக்குச் சில மின்னிதழ்கள்**

| | |
|---|---|
| நிலாச்சாரல் | http://www.nilacharal.com/ |
| சொல்வனம் | http://solvanam.com/ |
| வல்லினம் | http://vallinam.com.my/version2/ |
| தமிழோவியம் | https://www.tamiloviam.com/ |



11th Advance Tamil - FINAL.indd 185 14-02-2019 17:28:22

## அறிவோம் தெளிவோம்


## இதழியல் – சில முதன்மைகள்

1. இந்திய இதழியலின் தந்தை –ஜேம்ஸ் அகஸ்ட்டஸ் ஹிக்கி
2. இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட இதழ் பெங்கால் கெஜட் (1780) (கல்கத்தா ஜெனரல் அட்வைசர்)
3. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் நாளிதழ் – மதராஸ் மெயில் (1868)
4. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ் – சுதேசமித்திரன் (1882)

கவரும்வகையில் வண்ணப்படங்களுடன் அமைந்திருக்கும்.

### அட்டைப்படம்

பருவ இதழ்களில் அட்டைப்படங்களே இதழ்களின் வாயில்கள் எனலாம். அட்டைப்பகுதி, படிப்பவர் மனங்களைச் கவரும்வகையில் அமைதல் வேண்டும். இதழின் உள்ளடக்கச் செய்தியைத் தலைப்பாகக்கொண்டு, வண்ணப்படங்களுடன் அட்டைப்பகுதி அமைந்திருக்கும்.




### இணைய இதழ்கள்

இன்று, மக்களிடையே செய்தியை விரைவாகக் கொண்டுசேர்க்கும் ஊடகமாக இணையத்தளம் செயல்பட்டு வருகின்றது. நவீன உலகில் அன்றாடச் செயல்பாடுகளில் தவிர்க்க முடியாத தேவையாக இணையம் உள்ளது. இணையத்தில் வெளியிடப்படும் இதழ்கள், கணினி வழியாகவோ திறன்பேசி வழியாகவோ மிக எளிதாக வாசகர்களைச் சென்றடையும் வலிமை வாய்ந்தவை. அச்சு இதழ்களைவிட இணைய இதழ்களின் பரவல் உலகளாவியது. முழுவதும் மின்பக்கங்களைக் கொண்ட மின்னிதழ்கள், இணையத்தில் வெளியிடப்படுகின்றன.

### இணையத்தில் அச்சிதழ்கள்

அச்சில் வெளிவரும் பெரும்பாலான நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் இணையத்திலும் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அவற்றில் எந்த ஓர் இதழையும் காலவாரியாக நாம் பதிவிறக்கம் செய்து படிக்கலாம். பெரும்பாலான வெளியீட்டு நிறுவனங்கள் இவற்றைக் கட்டணமின்றி வழங்குகின்றன. சில நிறுவனங்கள், கட்டணங்களைப் பெற்றுக்கொண்டு மின்னிதழ்களை வழங்குகின்றன.

### இதழ்களின் பெருக்கமும் தேவையும்

தொடக்கக் காலத்தில் குறைவான இதழ்களே வெளிவந்தன. தற்போது நாளுக்குநாள் படிப்பவர்களின் எண்ணிக்கை பெருகிவருகின்றது. எனவே, அவர்களின் தேவைக்கேற்ப இதழ்கள் வெளிவருகின்றன. ஒவ்வோர் இதழும் வாசகர்களை மனநிறைவு அடையச் செய்ய முயல்கின்றன. இதழ்கள் படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டு வெளிவருகின்றன. மேலும், நடுநிலையோடு செய்திகளை வெளியிடுகின்றன; மக்களிடையே நாட்டுநடப்புகளை அறியவைத்து, அறிவாற்றலை மேம்படுத்துகின்றன; சமூக மாற்றங்களுக்கு அடித்தளமாகவும் உள்ளன.



11th Advance Tamil - FINAL.indd 186 14-02-2019 17:28:22

# இணைப்பு

## அச்சுப்படிகளில் பிழை திருத்துதல்


இதழ்களை அச்சிடுவதற்குத் தயாரிக்கப்படும் அச்சுப்படிகளில் மெய்ப்புத்திருத்தும் முறைகள் அவற்றிற்குரிய குறியீடுகளுடன் இங்கே தரப்பட்டுள்ளன. இக்குறியீடுகள், இதழ் உருவாக்கத்தில் மட்டுமில்லாமல் அனைத்துவகை அச்சுப்படிகளில் பிழை நீக்கம் செய்யவும் பயன்படுகின்றன.

## ஐவகையான அச்சுப்படித் திருத்தக்குறியீடுகள்

| 1. பொதுவானவை | | |
|---|---|---|
| Dt | – | அச்சடித்திருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்குக |
| Stet | – | ஏற்கெனவே உள்ளதுபோலவே இருக்கட்டும் |
| ^ | – | சொல்லையோ எழுத்தையோ இந்த இடத்தில் சேர்த்துக்கொள்க |
| X | – | சரியாக விழாமல் உள்ள எழுத்துகளை மாற்றுக |
| // | – | செங்குத்தாக உள்ளவற்றைச் சரிசெய்க |
| [ | – | புதிய பத்தி (New Paragraph) தொடங்குக |

| 2. நிறுத்தக்குறியீடுகள் | | |
|---|---|---|
| ,/ | – | கால்புள்ளியைச் சேர்க்கவும் |
| ;/ | – | அரைப்புள்ளியைச் சேர்க்கவும் |
| ./ | – | முற்றுப்புள்ளி இடவும் |
| ?/ | – | கேள்வி அடையாளம் இடவும் |
| !/ | – | வியப்புக்குறியைச் சேர்த்துக் கொள்ளவும் |
| :/ | – | இரண்டு புள்ளிகளைச் சேர்க்கவும் |
| '/ | – | ஒற்றை மேற்கோள் அடையாளம் இடவும் |

| 3. இடைவெளி தரவேண்டியவை | | |
|---|---|---|
|  | – | சொற்களை அல்லது எழுத்துகளை இடைவெளியின்றிச் சேர்க்க |
| # | – | பத்தி, வரி மற்றும் சொற்களுக்கிடையில் இடைவெளி தருக |

| 4. இணைக்க வேண்டியவை | | |
|---|---|---|
|  | – | இடப்பக்கம் தள்ளவும் |
|  | – | வலப்பக்கம் தள்ளவும் |
| T | – | மேலே உயர்த்தவும் |
|  | – | கீழே தள்ளவும் |
|  | – | பத்திகளை இணைக்கவும் |
|  | – | சொல்லைப் பிரித்துத்தரவும் |
|  | – | ஒற்றை மேற்கோள் குறியீடு இடுக |
|  | – | இரட்டை மேற்கோள் குறியீடு இடுக |

| 5.எழுத்துவடிவம் | | |
|---|---|---|
| S.C | – | பெரிய எழுத்தில் உள்ளதைச் சிறிய எழுத்தில் மாற்றுக |
| Caps | – | பெரிய எழுத்தில் மாற்றுக |
| bold | – | தடித்த எழுத்தில் மாற்றுக |
| trs | – | சொற்கள், எழுத்துகளை மாற்றுக |
| l.c. | – | சிறிய எழுத்தில் அச்சிடுக |

அச்சுப்பிழைத் திருத்துவோர் அச்சுப்படியில் பிழையுள்ள இடத்தில் ஒரு சாய்ந்த கோடிட்டு (/) அடித்தல் வேண்டும். வலப்பக்க, இடப்பக்க ஓரங்களில் அச்சுப்பிழைத் திருத்தக்குறியீடுகளை எழுதி, என்ன திருத்தம் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

உரையாடல்

# தமிழ் இதழ்கள் – ஒரு சந்திப்பு

ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. வழியெங்கும் வண்ணத் தோரணங்களும் விதவிதமான கோலங்களும் மனத்தை மகிழ்வித்தன. கவின், கடைத்தெரு வழியாகச் சென்றுகொண்டிருக்கிறான். அப்போது பக்கத்து ஊரில் வசிக்கும் சிற்றப்பா மகள் கவிமதி எதிரே வருகிறாள் இருவரும் சந்தித்து உரையாடுகின்றனர்.

**கவின்:** கவிமதி! யாரைத் தேடுகிறாய்?

**கவிமதி:** கவின் உன்னைத்தான் காணவந்தேன். உங்கள் ஊரில் திருவிழாவா?

**கவின்:** ஆம், புத்தகத் திருவிழா.

**கவிமதி:** என்ன! புத்தகத் திருவிழாவா? உங்கள் ஊரில் புத்தகத் திருவிழா நடப்பதை நினைத்தால் மிகவும் பெருமையாக இருக்கிறது.

**கவின்:** சரி, வா, வீட்டிற்குச் செல்வோம். எங்கள் வீட்டில் உன்னைக் கண்டால் அனைவரும் மகிழ்வர்.

(இருவரும் பேசியபடி கடைத்தெருவழியே நடந்துசெல்கின்றனர். அப்போது யாரோ அழைப்பதுபோல் தோன்றியது. இருவரும் அழைப்பு வந்த திசையினை நோக்கித் திரும்பினர். அழைத்தது எதிரே இருந்த புத்தகக்கடையில் மிடுக்குடன் அச்சின் வாசனையோடு, புத்தம் புதியதாகப் படபடத்துக் கொண்டிருந்தது ஒரு நாளிதழ். அது யாரும் எதிர்பாராத நேரத்தில் சட்டெனப் பேசத் தொடங்கியது)

**நாளிதழ்:** நண்பர்களே! இங்கு வாருங்கள்.

**கவின்:** என்ன! எங்களை அழைத்தது நீயா? எதற்காக அழைத்தாய் நாளிதழே?

**நாளிதழ்:** நானும் பல நாளாக உங்களின் நட்பிற்காகக் காத்திருக்கிறேன். நீங்கள்தாம் என்னுடன் பேசாமலும் என்னைப் புரட்டாமலும் உங்கள் போக்கில் சென்று கொண்டிருக்கிறீர்கள்.

**கவிமதி:** நாங்கள் ஏன் உன்னுடன் பேச வேண்டும்?

**நாளிதழ்:** அன்றாடம் நடைபெறும் நாட்டுநடப்புகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள நினைக்கிறேன். என் வரிகளை நீங்கள் மேலிருந்து கீழாய் வாசித்தால் நான் உங்களைக் கீழிருந்து மேலாய் உயர்த்துவேன் தெரியுமா? இதனால் நமக்குள் நல்ல நட்பு மலர்வதுடன் உங்கள் அறிவாற்றலும் வளரும்.

**கவிமதி:** எப்படி?

**நாளிதழ்:** என்னை வாசித்தால் நீங்கள் திறம்படச் சிந்திப்பீர்கள். உலகின் பல இடங்களில் நடைபெறும் நிகழ்வுகள், அறிவியல் செய்திகள், பொருளியல் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், திரைப்படச் செய்திகள், கருத்துப்படங்கள், கல்விச் செய்திகள் முதலானவற்றை என்னிடமிருந்து உங்களால் பெற இயலும்.

**கவின்:** எங்கள் ஆசிரியர் சொல் விளையாட்டு ஒன்றை உருவாக்கி வரும்படி என்னிடம் கூறினார். அதற்கான வழிமுறையினை உன்னால் கூற இயலுமா?

**நாளிதழ்:** சொல் விளையாட்டிற்கான வழிமுறையினை இணைப்பு இதழாய் வெளிவரும் என் மகளாகிய சிறுவர் இதழில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாமே!

**கவிமதி:** சிறுவர் இதழில் வேறு என்னவெல்லாம் தெரிந்துகொள்ளலாம் ?

**நாளிதழ்:** சிறுவர் இதழில் சிறுவர்களுக்கான நன்னெறிக் கதைகள்,



11th Advance Tamil - FINAL.indd 188 14-02-2019 17:28:22

ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல், கணிதப்புதிர்கள், புதிர் விளையாட்டுகள், விடுகதைகள் போன்றவற்றை அறியலாம். மேலும், இவற்றில் போட்டிகள் நடத்திப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

(அப்போது, சிறுவர் இதழ் குறுக்கிட்டுப் பேசத் தொடங்குகிறது.)

**சிறுவர் இதழ்:** அம்மா! இன்னும் சிலவற்றை மறந்துவிட்டீர்கள். அறிவியல் விந்தைகள், குழந்தைப் படைப்புகள், பிறந்தநாள் வாழ்த்துகள் ஆகியவற்றையும் நான் கொண்டிருக்கிறேன்.

**கவின் :** அப்படியா? தங்களுடன் பிறந்தவர்கள் யாரேனும் உள்ளனரா?

**சிறுவர் இதழ்:** ஆம், எங்கு நோக்கினும் இதழ்த் தம்பிகளும் தங்கைகளும்தான்! இளைஞர் இதழ், மகளிர் இதழ், மருத்துவ இதழ், ஆன்மீக இதழ், சோதிட இதழ் முதலான உடன்பிறந்தவர்கள் பலரும் எனக்கு உண்டு.

(அப்போது, எங்கிருந்தோ சிரிப்பொலி கேட்கிறது)

**கவிமதி:** யார் இப்படிச் சிரிப்பது?

**நாளிதழ்:** அது வேறுயாருமில்லை, எங்கள் வீட்டில் செல்லமாய் வளரும் கேலிச் சித்திரம்தான். யாரையாவது விளையாட்டாகப் படம் வரைந்து நகைக்கச்செய்வதே அதன் வேலையாய்ப் போய்விட்டது.

**கவின்:** உள்ளே வேறு யாரெல்லாம் உள்ளார்கள்?

**நாளிதழ்:** உள்ளே கருத்துப்படம், கதைப்படம், செய்திப்படம், துணுக்குச்செய்தி போன்ற செல்லப் பிள்ளைகள் பலரும் இருக்கின்றனர். காலை நாளிதழ், மாலை நாளிதழ் என ஒரு நாளில் இருமுறை வெளிவருகிறோம்.

**கவின்:** எதற்காக ஒரு நாளைக்கு இரண்டு முறை?

**நாளிதழ்:** நாம் தகவல் யுகத்தில் வாழ்கிறோம். அவ்வப்போது நடைபெறும் செய்திகளை உடனுக்குடன் கொண்டு சேர்ப்பதற்காக நான் ஒரு நாளைக்கு இரண்டு முறை வெளிவருகிறேன்.

**கவின்:** உங்கள் வீட்டில் விருந்தினர் பலர் வந்திருக்கிறார்கள்போல் தோன்றுகிறதே!

**நாளிதழ்:** ஆம், புத்தகத் திருவிழா என்று கேள்விப்பட்டு என்னுடைய தோழி பருவ இதழ், தன் குழந்தைகளுடன் வந்திருக்கின்றாள். உங்களுடன் பேச ஆசைப்படுகிறாள்.

**கவிமதி:** நாங்களும்தான்.

**பருவ இதழ்:** வணக்கம், நண்பர்களே!

**இருவரும்:** வணக்கம் பருவ இதழே! உன்னைப்பற்றித் தெரிந்துகொள்ள நாங்கள் மிகவும் ஆவலாக உள்ளோம்.

**பருவ இதழ்:** நான் இலக்கியம், விளையாட்டு, மகளிர் மேன்மை, சிறுவர் நலன், இளைஞர் நலன், தன்னம்பிக்கை, மருத்துவம், வேளாண்மை, வாணிகம், வேலைவாய்ப்பு, புலனாய்வு, ஆராய்ச்சி, தொழில்நுட்பம், திரைப்படம் போன்ற செய்திகளைத் தாங்கித் தனித்தனி இதழ்களாக வெளிவருகிறேன்.

**கவிமதி:** இலக்கிய இதழாய் எங்களுக்குக் கூற ஏதேனும் செய்தி உள்ளதா ?

**பருவ இதழ்:** இலக்கியத்தோடு எனக்கு நெருக்கமான தொடர்பு உண்டு. சமகாலப் படைப்பிலக்கியங்கள், படைப்பாளிகளின் நேர்காணல்கள், நவீன இலக்கியக் கோட்பாட்டுக்கட்டுரைகள்,சமூக,பொருளாதார, அரசியல் எதிர்வினைகள், இளம் படைப்பாளர் அறிமுகம் போன்றவற்றை இலக்கிய இதழான என்னுள் காணலாம். கதை, கவிதை, கட்டுரை போன்றனவும் எனக்குள் இடம்பெறும்.

**கவின்:** எனக்கு விளையாட்டு மிகவும் பிடிக்கும்.

**பருவ இதழ்:** நீங்கள் என்ன கூற வருகிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. விளையாட்டு பற்றிய செய்திகள்தானே? உலகக் கோப்பைப் போட்டிகள், விளையாட்டு

வீரர்களின் நேர்காணல்கள் என விளையாட்டுச் செய்திகளுக்கென விளையாட்டு இதழாக நான் வெளிவருகிறேன். அதில் உங்களுக்கு ஏற்படும் ஐயங்களுக்கான விடைகளைப் பெறலாம்.

**கவிமதி:** என் தாயாருக்கு அடிக்கடி உடல் நலமில்லாமல் போகிறது. அவர்களின் உடல்நலத்திற்கான வழிகாட்டுதல்களைத் தங்களால் கூற இயலுமா?

**பருவ இதழ்:** வந்தபின் வருந்துவதைவிட, வருமுன் காப்பதுதானே சிறந்தது. நலவாழ்வு தரும் விழிப்புணர்வுக் கருத்துகளோடு நான் மருத்துவ இதழாக வெளிவருகிறேன்; உடல்நலம் சார்ந்த இயற்கையான மருத்துவக் குறிப்புகளையும் மருத்துவர்களின் ஆலோசனைகளையும் வழங்குகிறேன்; உடல்நலம் குறித்த கட்டுரைகளையும் உளவியல் தொடர்பான வினாவிடைகளையும் தாங்கி வெளிவருகிறேன். இச்செய்திகள் உங்கள் தாயாருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**கவிமதி:** வேறு என்னென்ன செய்திகளை உன்னிடமிருந்து நாங்கள் கற்றுக்கொள்ள இயலும்?

**பருவ இதழ்:** தொழில் முனைவோருக்கான கல்வித் தகுதிகள், வழிகாட்டுதல்கள், முதலீடுகள், அதற்கான அரசு மானியத்தொகை பற்றிய செய்திகளுடன் தொழில் இதழாக வெளிவருகின்றேன். வேளாண்மைக்கான அரசுத்திட்டங்கள், பங்குச்சந்தை முதலீடுகள், மேலாண்மைச் சிந்தனைகள், விளம்பர உத்திகள், வரிவிதிப்பு தொடர்பான ஆலோசனைகளோடு வாணிக இதழாகவும் வெளிவருகிறேன்.

**கவின்:** அப்படியா! சரி. நான் சிறந்த ஓர் ஆய்வாளராக வர விரும்புகிறேன். அதற்கு நீ வழிகாட்டுவாயா?

**பருவ இதழ்:** ஓ! புதிய கண்டுபிடிப்புகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் கொண்டு ஆராய்ச்சி இதழாக வெளிவருகின்றேனே, அதுமட்டுமா? உங்களைப் போன்ற இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கொடுக்கும் வகையில் கட்டுரைகள், கதைகள், கவிதைகள், சாதனை படைத்த ஆளுமைகள் பற்றிய செய்திகளைத் தாங்கித் தன்னம்பிக்கை இதழ்களாகவும் வெளிவருகிறேன்.

**கவிமதி:** புதிய தொழில் நுட்பங்களைப்பற்றி, உன்னிடம் தெரிந்துகொள்ள இயலுமா?

**பருவ இதழ்:** ஓ! தெரிந்துகொள்ளலாமே! கணினித் தொழில்நுட்பத்திற்கெனத் தனி இதழாகவே வெளிவருகிறேன். அதுமட்டுமின்றி மென்பொருள், இயந்திரங்கள், வாகனங்கள், வேளாண்மை முதலான தொழில்நுட்பம்

## அறிவோம் தெளிவோம்

## செய்தி நிறுவனங்கள்

### உலகச் செய்தி நிறுவனங்கள்

1. அமெரிக்க அசோசியேட்டட் பிரஸ் (A.P)
2. இராய்ட்டர் நிறுவனம் ( Reuter)
3. ஏஜென்சி பிரான்ஸ் பிரஸ் (A.F.P)
4. யுனைடெட் பிரஸ் இன்டர்நேஷனல் ( U.P.I)
5. டாஸ் செய்தி நிறுவனம் (Tass)

### இந்தியச் செய்தி நிறுவனங்கள்

#### பொது நிறுவனம்

1. அசோசியேட்டட் பிரஸ் ஆப் இந்தியா (A.P.I)
2. பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா (P.T.I)
3. யுனைடெட் பிரஸ் ஆப் இந்தியா (U.P.I)
4. யுனைடெட் நியூஸ் ஆப் இந்தியா (U.N.I)
5. பிரி பிரஸ் ஆப் இந்தியா (F.P.I)

#### தனியார் நிறுவனங்கள்

1. குளோப் நியூஸ் ஏஜென்சி (Globe News Agency)
2. ஓரியண்ட் பிரஸ் (Orient Press)
3. டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India)
4. இந்தியன் எக்ஸ்பிரஸ் (Indian Express)



பற்றிய செய்திகளையும் என்னைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். இத்துடன் திரைப்படத் தொழில்நுட்பம் பற்றியும், திரைப்படக் கலை பற்றியும் கூறுவதற்காகத் திரைப்பட இதழ்களாகவும் வெளிவருகிறேன்.

**கவின்:** இவை எல்லாவற்றையும் நாங்கள் எப்படித் தெரிந்து கொள்வது?

**பருவ இதழ்:** இவை எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டுமானால், நீங்கள் என் பிள்ளைகளான வார இதழ், மாத இதழ், ஆண்டிதழ்களோடு நட்பு கொண்டு அவர்களை அவ்வப்போது படித்துவர வேண்டும். இதோ, எனது இளைய மகள் வார இதழ் வந்துவிட்டாள். அவளுடன் சற்று உரையாடுங்கள்.

**கவிமதி:** வணக்கம் தோழி!

**வார இதழ்:** வணக்கம். நண்பர்களே! உங்களின் நட்பு கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்கிறேன். நமது நட்பு தொடர என்னைப் பற்றிய சில செய்திகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

**கவிமதி:** சொல்லுங்கள், தெரிந்து கொள்கிறோம்.

**வார இதழ்:** நான் வாரம் ஒரு முறை இதழாகவும், வாரம் இரு முறை இதழாகவும் வாரம் மும்முறை இதழாகவும் வெளிவருகிறேன். அரசியல், தொழில், கல்வி, மகளிர், இளைஞர், மருத்துவம், திரைப்படம் சார்ந்த தனித்தனி இதழ்களாகவும் வருகின்றேன்.

**கவிமதி:** எதற்காக இத்தனை இதழ்களாக வெளிவருகின்றீர்கள்?

**வார இதழ்:** மக்களனைவரும் அவரவர் விருப்பத்திற்கேற்பச் செய்திகளைத் தேடிப் படிக்கின்றனர். எனவே, அவரவர் விருப்பத்திற்கு ஏற்பத் தனித்தனி இதழ்களாக வெளிவருகிறேன்.

**கவின்:** உங்களுடன் வந்துள்ள மற்ற உடன்பிறந்தவர்களைப் பற்றியும் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறோம்.

**வார இதழ்:** கட்டாயமாக நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். முதலில், என் உடன்பிறந்தவளான மாத இதழை அழைக்கிறேன்.

**மாத இதழ்:** வணக்கம். நண்பர்களே!

**இருவர்:** வணக்கம். மாத இதழாரே! நீங்கள் மாதம் ஒருமுறை வருவதாக அறிந்தேன்.

**மாத இதழ்:** மாதம் ஒருமுறை மட்டுமல்ல, மாதம் இரு முறையாகவும் வெளிவருகிறேன்.

**கவிமதி:** நீங்கள் என்னென்ன செய்திகளைத் தருவீர்கள்?

**மாத இதழ்:** நான், ஒருமாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகளைத் தாங்கி வெளிவருகிறேன். மருத்துவம், வேளாண்மை, தொழில், விளையாட்டு, வாணிகம், வேலைவாய்ப்பு, திரைப்படம் போன்ற பல செய்திகளுடன் சிறுகதை, கட்டுரை, தொடர்கதை போன்றவற்றையும் கொண்டு வெளிவருகிறேன். என் மற்றொரு தோழியான ஆண்டு இதழ் உங்களிடம் பேச விருப்பப்படுகிறாள்.

**கவிமதி:** பேசச்சொல்லுங்கள். நாங்களும் கேட்க ஆவலாக இருக்கிறோம்.

**ஆண்டு இதழ்:** நண்பர்களே! வணக்கம். ஆண்டிற்கு ஒரு முறை வெளியாவதால் என்னை ஆண்டு இதழ் என்று அழைக்கின்றனர். நான், ஓர் ஆண்டு முழுவதும் நடைபெறும் உலகச் செய்திகளைத் தொகுத்து மொத்தமாகத் தந்திடுவேன். மேலும், போட்டித் தேர்விற்குத் தேவையான பொதுஅறிவு தொடர்பான செய்திகளையும் வெளியிடுவேன். எனவே, என்னை எல்லாரும் விரும்பிப் படிப்பர். மேலும், காலாண்டிற்கு ஒருமுறை காலாண்டிதழும், அரையாண்டிற்கு ஒருமுறை அரையாண்டிதழும் என்னைப்போலவே வெளிவருகின்றன.

**கவிமதி:** உங்களுக்குள் செய்திகளின் தன்மை அடிப்படையில் ஏதேனும் வேறுபாடுகள் உண்டா?

**இதழ்கள்:** உண்டு. பொருள் நிறைந்த தகவல்களைக்கொண்டு புலமைமிக்கவர்கள் மட்டும் படிக்கும் இதழ்களைச் 'செவ்வியல் இதழ்கள்' என்றும், அனைத்து மக்களும் எளிதாகப் படிக்கக் கூடிய இதழ்களை 'மக்கள் இதழ்கள்' என்றும் அழைப்பர்.

**கவின்:** வேறு ஏதேனும் புதிய செய்திகள் இருந்தால் கூறுங்கள்?

**இதழ்கள்:** எங்களுடைய குழந்தைகளான இணைய இதழ்கள் பற்றியும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

**கவின்:** இணைய இதழ்களா? அவை என்ன செய்கின்றன? அவர்களை நாங்கள் எப்படிச் சந்திப்பது?

**ஆண்டு இதழ்:** கவலை வேண்டாம். எங்களையாவது பார்ப்பதற்கு நீங்கள் எங்கள் இருப்பிடம் தேடி வருதல் வேண்டும். ஆனால், நீங்கள் இணைய இணைப்பைப் பெற்றிருந்தால் எங்கள் குழந்தைகளான மின்னிதழ்களை உங்கள் இல்லத்திற்கே வரவழைக்கலாம். அவை உடனுக்குடன் செய்திகளை உங்களுக்குக் கொண்டு வந்துசேர்க்கின்றன.

**கவிமதி:** மிகவும் வியப்பாக உள்ளதே! இதுவரை உங்களின் பெருமை தெரியாமல் நாங்கள் உங்களைப் படிக்காமல் இருந்துவிட்டோம். இனி, நாங்கள் உங்களின் நண்பர்கள். எங்களின் அறிவு வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் தேவையான கருத்துகளை உங்களிடமிருந்து பெறக் காத்திருக்கின்றோம்.

**இதழ்கள்:** மிக்க மகிழ்ச்சி! உங்களின் ஆர்வம் எங்களை வியக்க வைக்கிறது. உங்களின் முன்னேற்றத்திற்காகவும், பயனுள்ள முறையில் நேரத்தைச் செலவிடவும் பல செய்திகளை உங்களுக்கு வழங்கவும் காத்திருக்கின்றோம். மேலும், உங்களின் படைப்புகளை வெளியிடவும் காத்திருக்கின்றோம். கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் போன்ற உங்களின் படைப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அவற்றுள் சிறந்த படைப்புகள், இதழ்களில் வெளிவரும். அவற்றிற்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

**கவின்:** மிக்க நன்றி. உங்கள் அனைவரையும் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி. கல்வித் திருவிழா நாளன்று நல்லறிவைப் பருகிய நிறைவுடன் செல்கின்றோம். படிப்பதில் உள்ள இன்பம் இப்பொழுது புரிகின்றது. நேரம் போனதே தெரியவில்லை. புத்தகத் திருவிழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். வீட்டில் அம்மா தேடுவார்கள். நாங்கள் செல்கிறோம். மீண்டும் சந்திப்போம்.



11th Advance Tamil - FINAL.indd 192 14-02-2019 17:28:23

கட்டுரை

# சமுதாய முன்னேற்றத்தில் இதழ்கள்

நாடோடிகளாக வாழ்ந்த மனிதஇனம் படிப்படியாக நாகரிக வளர்ச்சி பெற்று வாழ முற்பட்டது. அவர்களுக்குள்ளே செய்திப் பரிமாற்றங்கள் தேவைப்பட்டன. இதுவே மொழி தோன்றுவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தது. தீப்பந்தங்களை எரித்தும், பறை அறிவித்தும் ஓர் இடத்தில் நிகழும் செய்திகளை மற்றவர்களுக்கு அறிவித்தனர். மேலும், ஆட்களை அனுப்பியும் புறாக்களின் கால்களில் ஓலைகளைக் கட்டியும் செய்திகளைத் தெரிவித்தனர்.


## இதழ்களின் தோற்றம்

செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையினை ஜுலியஸ் சீசர் பொ.ஆ.மு. 60 இல் அறிமுகப்படுத்தினார். அவர் தினசரி செய்தி (Acta Diurna) என்ற பெயரில் கற்பலகைகள் மற்றும் செப்புத் தகடுகளில் அரசுச்செய்திகளை எழுதிப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தார். எனவே, அவர் "இதழியலின் தந்தை" என அழைக்கப்படுகிறார். இந்தியாவில் அசோகரின் கல்வெட்டுகளை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம்.

## அச்சு இதழ்கள்

சீனர்களால் காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அச்சுக்கலை தோன்றி வளர ஆரம்பித்தது. இதழ்களின் வளர்ச்சிக்கு அச்சுக்கலை பெருந்துணை புரிந்தது. பொ.ஆ. 1450இல் ஜோஹன்னஸ் கூடன்பர்க் (Johannes Gutenberg

**செய்திப் பரிமாற்றத்தின் வளர்ச்சி நிலைகள்**



புகைமூட்டிச் செய்தி அறிவித்தல்



குறியீடு வழியாகச் செய்தி அறிவித்தல்



முரசறைந்து செய்தி அறிவித்தல்



பொது இடங்களில் செய்தியை எழுதி வைத்தல்



1398-1468) என்ற ஜெர்மானியர் முதன்முதலில் அச்சுப்பொறியினைக் கண்டுபிடித்தார். இதனால், அச்சிட்ட இதழ்கள் நம் கரங்களில் தவழ்ந்து, சமுதாயம் பல மாற்றங்களைப் பெறக் காரணமாக அமைந்தது.

## இந்தியாவில் இதழ்கள்

1780-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29ஆம் நாள் பெங்கால் கெஜட் (Bengal Gazette or Calcutta General Advertiser) என்ற முதல் இந்தியச் செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி வெளியிட்டார்.



ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி

சென்னையில் 1785 அக்டோபர் 12-இல் முதன் முதலாக ரிச்சர்டு ஜான்சன் (Richard Johnson) என்பவர் "மெட்ராஸ் கூரியர்" (Madras Courier) என்ற ஆங்கில வார இதழை வெளியிட்டார்.

## தமிழ் இதழ்கள்

தமிழ்மொழியில் முதன்முதலில் வெளிவந்த நாளிதழ் எது என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரியவில்லை. 1856-இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கிய "தினவர்த்தமானி" தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும். இந்த இதழ் செய்திகளோடு கலை, இலக்கியம், அறிவியல் சார்ந்த கட்டுரைகளையும் கொண்டு வெளிவந்தது. 1870-இல் கல்வித்துறையின் ஆதரவில் "ஜனவிநோதினி" என்ற தமிழ் மாத இதழ் வெளிவந்தது. கல்வி வளர்ச்சியே இதன் தலையாய குறிக்கோளாக இருந்தது.

## விடுதலைப் போராட்டத்தில் தமிழ் இதழ்கள்

1882இல் ஜி.சுப்பிரமணியம் என்பவரால் வார இதழாகத் தொடங்கப்பெற்ற "சுதேசமித்திரன்" 1889-இல் நாளிதழாக மாறியது. 1904-இல் மகாகவி பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்தார். தமிழக மக்களின் துயில் நீக்க, புரட்சிகரமான கருத்துகளாலும் சுவைமிகு உரைநடையாலும் சுதேசமித்திரன் புதுப்பொலிவோடும் வலுவோடும் வெளிவந்தது.

மகாகவி பாரதியார், 1907-இல் "இந்தியா" என்ற தமிழ் மாத இதழையும், "பால பாரதம்" என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார். இதன்மூலம் நாட்டு மக்களிடையே விடுதலை உணர்வை வளர்த்தார். 1917-இல் திரு.வி.க. அவர்கள் "தேசபக்தன்" என்னும் நாளிதழைத் தொடங்கினார். சுதேசமித்திரனுக்குப் பிறகு தமிழ் மண்ணில் விடுதலை வேட்கையின் வித்தாய் விளங்கிய இதழ் இதுவே. இதைத் தொடர்ந்து நவசக்தி, திராவிடன், தமிழ்நாடு, ஜெயபாரதி, சுதந்திரச்சங்கு, ஜனசக்தி போன்ற இதழ்களும் தோன்றி மக்களிடையே விடுதலை வேட்கையை ஏற்படுத்தின.

## விடுதலைப் போரில் தேசிய இதழ்கள்

இந்தியா, ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டிருந்தபோது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மக்களை ஒன்று திரட்டி ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை மீட்டெடுக்கவும் போராட்டம் செய்த தலைவர்களுக்கு இதழ்கள் உறுதுணையாக இருந்தன. திலகரின் "கேசரி" அரவிந்தரின் "வந்தே மாதரம்" சுவாமி விவேகானந்தரின் "சகோதரர்" போன்ற இதழ்கள் உரிமை வேண்டித் தொடர்ந்து குரல் கொடுத்தன.

அதன் பின், அண்ணல் காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டங்கள் பல புரட்சிகரமான



11th Advance Tamil - FINAL.indd 194 14-02-2019 17:28:23

மாற்றங்களை ஏற்படுத்தின. அண்ணலின் அரசியல் நுழைவு, இதழ்களின் வளர்ச்சியில் இன்றியமையாத இடத்தைப் பெற்றது. அவர் தென் ஆப்பிரிக்காவில் "இந்தியன் ஒபினியன்" இதழையும் நம் நாட்டில் "யங் இந்தியா", "ஹரிஜன்" , "நவஜீவன்" ஆகிய இதழ்களையும் அறத்தோடும் தரத்தோடும் நடத்தி வந்தார்.

1942இல் "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்திற்குப் பின்னர், பெரும்பாலான இதழ்கள் தேசிய இயக்கத்தோடு ஒன்றிணைந்தன. இந்திய மக்களிடையே விடுதலை வேட்கையை வளர்த்தன. இதன் விளைவாக, நாட்டு மக்கள் அந்நியர்களை நாட்டைவிட்டு விரட்டும் முயற்சியில் பல போராட்டங்களை நடத்தி விடுதலை பெற்றனர்.

## விடுதலை இந்தியாவில் இதழ்கள்

சிறையிலிருந்து விடுபட்ட பறவையைப்போல, இந்திய மக்களின் இதயங்களும் சிறகடித்துப் பறக்கத் தொடங்கின. இதயங்கள் மட்டுமல்ல, இதழ்களும் கருத்துச் சுதந்திரம் பெற்றன. அடிமை இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் அடக்குமுறையை எதிர்த்துச் சில இதழ்களே வெளிவந்தன. விடுதலைக்குப் பின் எண்ணற்ற இதழ்கள் தோன்றிச் சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கின.

இதழ்கள் நாட்டுநடப்புகளையும் அறிவுசார் செய்திகளையும் அரசின் செயல்பாடுகளையும் மக்களுக்குத் தெரியப்படுத்தும் நோக்கோடு வெளிவருகின்றன. சமுதாயத்தில் நடக்கும் சீர்கேடுகளைக் கண்டறிந்து வெளியிடுவதன்மூலம் சமுதாயத்தை நெறிப்படுத்த அவை துணைபுரிகின்றன. சமுதாயத்தின் பல எதிர்ப்புகளைத் தாண்டி நடுநிலையோடு செய்திகளை வெளியிட்டு, நாட்டு மக்களின் வளமான வாழ்விற்கான அடித்தளத்தை அமைப்பதில் இதழ்களின் பணி இன்றியமையாததாகும்.

## சமுதாய முன்னேற்றத்தில் இதழ்களின் பங்கு

மக்கள் ஒன்றாய்க் கூடி வாழும் அமைப்பே சமூகம் ஆகும். அது மொழி, இன, அரசியல் தொடர்புகளினால் ஒருங்கிணைக்கப்படுகிறது. அத்தகைய சமூகத்தின் எண்ணங்களையும் எழுச்சிகளையும் எதிரொளிக்கும் கண்ணாடியாய் இதழ்கள் விளங்குகின்றன. இதழ்கள் அடிமையாய் இருக்கும் நாடுகளின் விடுதலைக்கு வித்திடுவதுடன், விடுதலை பெற்ற நாடுகளுக்கு மக்களாட்சிக் காவலனாகத் திகழ்கின்றன. மேலும், சமுதாயத்தில் நிகழும் குற்றங்களையும், ஊழல்களையும் அச்சமின்றி எடுத்துரைத்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் இதழ்கள் பெருந்தொண்டு ஆற்றுகின்றன.

## மொழி வளர்ச்சியில் இதழ்கள்

தமிழ்மொழியின்வளர்ச்சியில்,இதழ்களின் பங்கு அளப்பரியது. எழுத்துருவாக்கம், புதுமையாக்கம், கலைச்சொல் படைத்தல் போன்றவற்றிற்கு இதழ்கள் பெருந்துணை புரிகின்றன. தொடக்கக்கால இதழ்களில் பிறமொழி கலந்தே எழுதிவந்தனர். பின்னர் வந்த இலக்கிய இதழ்களும் தனித்தமிழ் இயக்க இதழ்களும் பிறமொழிக் கலப்பின்றி வெளிவந்தன. தமிழ் இதழியலில் மிகப் பெரிய மாற்றங்களை உருவாக்கிய பெருமை திரு.வி.கலியாண சுந்தரனாரையே சாரும். அவரின் இதழ்களில் கலப்பில்லாச் செந்தமிழ், சிறப்போடு வளர்ந்து வந்தது. புதுப்புதுத் தமிழ்ச் சொற்கள் உலா வந்தன. தமிழ் உரைநடை வரலாற்றில் அவரது நடை குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்ந்தது.

தனித்தமிழ் இயக்க இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. மறைமலை அடிகளின் 'அறிவுக்கடல்', சி.பா.ஆதித்தனாரின் 'தமிழன்', 'தமிழ்க்கொடி' பாரதிதாசனின் 'குயில்' பெருஞ்சித்திரனாரின் 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' போன்றவை தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய இதழ்களாகும்.

தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தோடு வெளிவந்த பெரியாரின் 'விடுதலை', 'குடியரசு' ஆகிய இதழ்கள் தமிழ்மொழி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றின.

## பண்பாட்டு வளர்ச்சியில் இதழ்களின் பங்கு

பண்பாட்டை உருவாக்குவதிலும் இதழ்கள் ஆற்றல் வாய்ந்தனவாக உள்ளன. வ.வே.சு-வின் பாலபாரதம் என்னும் இதழ் விடுதலை உணர்வை உண்டாக்கியது. பாரதியாரின் 'இந்தியா' இதழில் விடுதலை உணர்வு, சமூகச்சீர்திருத்தம், பண்பாடு ஆகியன வலியுறுத்தப்பட்டன. மணிக்கொடி இதழ் சமூகச் சீர்திருத்தம், தமிழ் மொழி மேம்பாடு ஆகியவற்றை வெளியிடுவதையே தன் குறிக்கோளாகக் கொண்டு விளங்கியது. சுதந்திரச் சங்கு, ஜெயபாரதம், லோகோபகாரி போன்ற இதழ்கள் பண்பாட்டுப் பாதுகாப்பு, தமிழ் மறுமலர்ச்சி ஆகியவற்றிற்காகப் பாடுபட்டன.

## கல்வி மறுமலர்ச்சி

ஒரு நாட்டின் அறிவு வளத்தை உறுதிசெய்வது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வியே. அக்கல்வியை வளர்ப்பதற்காகத் தமிழ்க்கல்வி (1897), முதியோர்கல்வி (1951), கல்விக்கதிர் (1969) போன்ற இதழ்கள் தொடர்ந்து பாடுபட்டுவந்தன. மருத்துவத்திற்காக ஆயுர்வேத பாஸ்கரன், ஆரோக்கியம், மூலிகை மணி, மூலிகை ரகசியம் முதலான இதழ்கள் வெளிவந்தன. தற்போது வார மாத இதழ்களிலும் நோய்கள் பற்றியும், நோய்க்கான மருத்துவம் பற்றியும், மருத்துவக் குறிப்புகளும் கட்டுரைகளும் வெளிவருகின்றன.


## அறிவியல் முன்னேற்றம்

ஒவ்வொரு நாளும் புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் தோன்றிய வண்ணம் உள்ளன. இத்தகைய புதிய கண்டுபிடிப்புகளையும் ஆராய்ச்சிகளையும் அறிவியல் இதழ்கள் உடனுக்குடன் வெளியிடுகின்றன. எதையும் ஏன்? எப்படி? எதற்கு? என்னும் வினாக்களுக்கு விடை கிடைத்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளும் அறிவியல் பார்வையை இவ்விதழ்கள் வளர்க்கின்றன.

தமிழில் புகழ்பெற்ற அறிவியல் இதழான 'கலைக்கதிர்' 1948முதல் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. அறிவியல் ஆய்வுகள் குறித்து நுட்பமாகவும் விரிவாகவும் அமைந்த கட்டுரைகளை அவ்விதழ்

### அறிவோம் தெளிவோம்

**பேரரசர் அசோகர் பொ. ஆ. மு. 262இல் மக்களுக்கு வெளியிட்ட அரசு செய்தி**



'பிரியமான மன்னர் பியாதசி இவ்வாறு சொல்கிறார்: 'இதற்குமுன் அரசாங்க வேலைகளைச் சரியாகக் கவனிக்க முடியாமலும், சரியான நேரத்தில் சரியான தகவல்களைப் பெற முடியாத நிலையும் இருந்து வந்தது. அதனால், இந்தப் புதிய ஆணை பிறப்பிக்கப்படுகிறது. மாமன்னராகிய நான் எந்த நேரத்திலும், உணவு சாப்பிட்டுக்கொண்டு இருந்தாலும், தேரில் பயணம் செய்துகொண்டு இருந்தாலும், வேறு எந்த இடத்தில் எப்படி இருந்தாலும், அரசாங்க அலுவலர்கள் மூலம் மக்களின் பிரச்னைகள் தொடர்பான தகவல்கள் உடனுக்குடன் எனக்கு அனுப்பப்பட வேண்டும். கொடை மற்றும் நலத் திட்டப் பொது அறிவிப்புகள் தொடர்பாக நான் வாய் வார்த்தைகளாகப் பிறப்பித்து இருக்கும் ஆணைகள் தொடர்பாக யாருக்காவது ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அது தொடர்பான தகவல்கள் உடனடியாக மன்னராகிய என்னிடம் வந்து சேரவேண்டும். இது என்னுடைய ஆணை. வேலையைக் கவனமாகச் செய்வதிலும் அதற்காகக் கடுமையாக உழைப்பதிலும் போதும் என ஒரு நாளும் நான் திருப்தி அடைவது இல்லை. மக்கள் அனைவரது நலத்தையும் பேணுவதை என்னுடைய கடமையாக நினைக்கிறேன். அதைச் சிறப்பாகச் செய்ய நான் கடும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது, ஆகவே, வேலைகளைத் தாமதமின்றி உடனே முடிக்க வேண்டும். மக்களின் நலத்தை முன்னெடுப்பதைவிட முக்கியமான வேலை ஏதும் இல்லை. இது தர்ம ஆணை.



11th Advance Tamil - FINAL.indd 196 14-02-2019 17:28:23

வெளியிடுகிறது. 'துளிர்' என்னும் அறிவியல் இதழ்சிறுவர்களிடையேஅறிவியல்ஆர்வத்தைத் தூண்டும் வகையில் செய்திகளையும், செயல்பாடுகளையும் வெளியிட்டு வருகிறது. 'கம்ப்யூட்டர் உலகம்', 'தமிழ் கம்ப்யூட்டர்' போன்ற கணினி இதழ்கள் கணினி அறிவை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் பல புதிய தொழில்நுட்பச் செய்திகளைத் தாங்கி வெளிவருகின்றன.

### வேளாண்மை

மனிதர் உட்பட அனைத்து உயிரிகளும் வேளாண்மையை நம்பியே உயிர் வாழ்கின்றன. அப்படிப்பட்ட வேளாண்மைத் துறையில் ஏற்படும் மாற்றங்களை மக்கள் தெரிந்துகொள்வது மிகவும் தேவையான ஒன்றாகும். பெரும்பாலும் வேளாண்மைத் தொழில் செய்வோர் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்கள் புரிந்துகொள்ளும் எளிய நடையில் வேளாண்மை இதழ்கள் வெளிவருகின்றன. உற்பத்தியைப் பெருக்குதல், பயிர்ப் பாதுகாப்பு பற்றிய கட்டுரைகள் இவ்விதழ்களில் வெளிவருகின்றன.

### பெண்ணுரிமை

பெண்கல்வியும், கைம்பெண் மறுமணமும் மறுக்கப்பட்ட காலத்தில் பெண்களுக்காக இதழ்கள் பெரிதும் போராடின. இராஜாராம் மோகன்ராய் 'சம்பத் கௌமுதி' என்ற இதழில் பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்து வன்மையாகக் கண்டித்து எழுதினார். குறிப்பாகப் பெண்கள் உடன்கட்டை ஏறுவதைத் தீவிரமாக எதிர்த்தார். இவரின் முயற்சியால் 1829-இல் வில்லியம் பெண்டிங் பிரபு




உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நீக்கினார். தற்போது அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குச் சமஉரிமை வழங்கக் கோரி இதழ்கள் வெளிவருகின்றன. மேலும், பெண்களுக்கென்றே இதழ்கள் வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது.

### குழந்தை நலம்

வளமான நாடு, நலமுடன் வளரும் குழந்தைகளாலேயே உருவாகும். எனவே, குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் சிறுவர் இதழ்கள் பல வெளிவருகின்றன. அவற்றில் வெளியாகும் படக்கதைகள், விடுகதைகள், குழந்தைகளின் ஓவியங்கள் ஆகியன அவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கின்றன.

இவ்வாறு அன்றாட நிகழ்வுகளின் பதிவுகள், அறிஞர்களின் படைப்புகள், கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் செயல்பாடுகள், தொழில், பொருளாதார வளர்ச்சி நிலைகள், சுகாதாரம், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு நடைமுறைகள் முதலிய அனைத்து வாழ்வியல் கூறுகளையும் வெளியிடுவதன் மூலம் சமூக முன்னேற்றத்திற்கான மிகச்சிறந்த காரணிகளாக இதழ்கள் விளங்குகின்றன.

**அறிவோம் தெளிவோம்** — **தமிழ்ச் சிற்றிதழ்கள்**

ஒரு குறிப்பிட்ட குழுவிலிருந்து குறிப்பிட்ட வாசகர்களை நோக்கி வலிமையான சமூக நோக்கங்களோடு வெளியிடப்படும் இதழ்களே சிற்றிதழ்கள். இவை மாத, காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டு இதழ்களாக வெளிவருகின்றன. தமிழ் இலக்கியப்போக்கில் மாற்றங்களைச் சிற்றிதழ்களே ஏற்படுத்தியுள்ளன. ஒரு வணிக இதழ், தனக்குச் சார்பான நிலையில் அமைந்த பொழுதுபோக்கு எழுத்துகளை மட்டும் வெளியிடும் நிலையில் சிற்றிதழ்கள், மக்களின் வாழ்வியல் பதிவுகளைத் தாங்கி வரும் சமூக மாற்றத்திற்கான கருத்தாயுதங்களாகத் திகழ்கின்றன. தமிழின் புகழ்பெற்ற சிற்றிதழ்களுள் சில... மணிக்கொடி, கிராம ஊழியன், கலாமோகினி, எழுத்து, கசடதபற, ழ, வானம்பாடி, இலக்கிய வட்டம், சூறாவளி, சலங்கை, கலைமகள், சுபமங்களா, கணையாழி, நிகழ்.



11th Advance Tamil - FINAL.indd 197 14-02-2019 17:28:24

கட்டுரை

# ஊடகவியலில் தமிழ் ஆளுமைகள்



## பாரதியார் (1882–1921)

### கருத்துப்படம்

தமிழ் இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் புதுமைகளைத் தொடங்கி வைத்த பாரதியார், இதழியலிலும் புத்தெழுச்சியை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

### கருத்துப்படம்

அன்றாடம் நடைபெறும் அரசியல் சமூக நிகழ்வுகள் மீதான எள்ளலும் நகைச்சுவையும் நிறைந்த திறனாய்வுக் கருத்தின் வரைகோட்டு ஓவியமே கருத்துப்படம். கருத்துப்படம் என்பதும் ஒரு தலையங்கமாகவே கருதப்படுகின்றது. பல சொற்கள் வெளிப்படுத்துவதை ஒரு கருத்துப்படம் சில கோடுகளின்வழி எளிதில் உணர்த்திவிடுகின்றது. ஆங்கிலத்தில் 'கார்ட்டூன்' (cartoon) என்று அழைக்கப்படும் இது தமிழில் கருத்துப்படம், விகடசித்திரம், வேடிக்கைசித்திரம், கேலிச்சித்திரம், விளக்கப்படம், கூடார்த்த படம் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. இதனைப் பாரதியார் 'விகடசித்திரம்' என்று குறிப்பிடுகிறார்.

### இந்தியாவில் கருத்துப்படம்

1850 ஆம் ஆண்டு முதல் தில்லியிலிருந்து வெளியான, 'தில்லி ஸ்கெட்ச் புக்' (Delhi Sketch Book), என்ற இதழ்தான் இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படங்களை வெளியிட்ட இதழாகும். வங்காளத்திலிருந்து வெளியான அமிர்த பஜார் பத்திரிகா, தில்லியிலிருந்து வெளியான 'இந்தியன் பஞ்ச்', 'அவத் பஞ்ச்' ஆகிய இதழ்களும் தொடக்க கால கருத்துப்படங்களுக்காக அறியப்படுகின்றன.

### பாரதியின் கருத்துப்படம்

தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும். இதனைப் பாரதி, "புதிய அபிவிருத்தி" என்ற கட்டுரையில் (13.3.1909) "தமிழ்நாட்டு வர்த்தமானப் பத்திரிகைகளிலே நமது பத்திரிகையொன்றுதான் விகடசித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று குறிப்பிடுகின்றார். மேலும், அவர் "அடுத்த வாரம்முதல் தலைப்பக்கத்தில் உள்ள ஒரு சித்திரம் மட்டுமே அன்றி, பக்கத்துக்குப் பக்கம் உள்ள முக்கியமான வர்த்தமானங்களை விளக்குவதன் பொருட்டு ஆங்காங்குச் சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம்" என்றும் குறிப்பிடுகிறார்.




11th Advance Tamil - FINAL.indd 198 14-02-2019 17:28:24

கருத்துப்படங்களின் வழியாகச் செய்திகளை எளிமையாகக் கொண்டுசெல்ல முடியும் என்று பாரதி நம்பினார்.

மார்ட்டின் லூதர்கிங், தமது புரட்சிக் கருத்துகளை ஜெர்மனியில் பரப்புவதற்குக் கருத்துப்படங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களைப் பயன்படுத்தினார். அதேபோன்று, பாரதியும் தமது கருத்துப்படங்கள்வழி அன்றைய அரசியல், சமூகச் சூழல்களையும் சுட்டிக்காட்டி விடுதலைப் போராட்டத்தில் மக்கள் பங்குபெறவேண்டும் என்கிற உணர்வினை ஏற்படுத்தினார். இக்கருத்துப்படங்களுக்காகவும், கட்டுரைகளுக்காகவும் 'இந்தியா' இதழுக்கு ஆங்கிலேய அரசு தடை விதித்ததிலிருந்து அவை மக்களிடையே ஏற்படுத்திய விழிப்புணர்வினை நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறது.

## வெள்ளையரின் சுரண்டலை வெளிக்காட்டிய படங்கள்

ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் சித்திரம் ஒன்றையும் (இந்தியா இதழ் - 8.9.1906). இந்தியர்களை எலும்பும் தோலுமாகவும் வெள்ளையர்களைச் செல்வச்செழிப்புடனும் அமைத்து, இந்தியாவின் நிலையை விளக்கியிருந்தார்.




## சுதந்திர விடியல்

எங்கு உரிமை மறுக்கப்படுகின்றதோ அங்குப் புரட்சி எழும் என்ற கருத்திற்கேற்ப ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகளால் இந்தியாவில் விடுதலை உணர்வு மேலோங்கியது. கடுமையான சட்டங்கள் என்ற கோழி, குப்பைமேட்டிலிருந்து கூவுகின்றது. இக்கோழியின் குரலைக் கேட்டவுனே 'சுதந்திர சூரியன்' உதிப்பது போன்ற (19.12.1908) சித்திரம் வரைந்தார். இவ்வாறு சித்திரங்களின்வழி, மக்களுக்குச் சுதந்திர உணர்வை ஊட்டினார்.



## பொருளாதாரம் சார்ந்த படங்கள்


பாரதியார் ஒரு பன்முக ஆளுமைத் தன்மை கொண்டவர். அவருடைய பொருளாதார அறிவு வியக்கத்தக்கது. 'பஞ்சம்' என்ற தலைப்பில் சித்திரம் வரைந்து, அதில் பஞ்சத்திற்குக் காரணம் பருவநிலை மாற்றம் இல்லை. இந்திய உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுதான் என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

ஆங்கிலேய அரசின் வரிவிதிப்புச் சார்ந்து 30.03.1907-இல் 'இந்திய யானையும் ஸர்க்கார்ப் பாகனும்' என்னும் தலைப்பில் வெளியான கருத்துப்படம் மக்களிடையே பெரிதும் பேசப்பட்டது. அமைதியும், பலமும் கொண்ட இந்தியா என்ற யானையின்மீது சுங்கவரி, நிலவரி, தொழில்வரி, வருமான வரி முதலிய சுமக்க முடியாத வரிச்சுமைகளை ஏற்றி, அதன் கழுத்தின்மீது அமர்ந்து ஜான் புல் துரை (ஆங்கிலேய அரசு) சவாரி செய்வதுபோல



11th Advance Tamil - FINAL.indd 199 14-02-2019 17:28:24


இக்கருத்துப்படம் அமைந்துள்ளது. இதில் சிறு வரிச்சலுகையாக உப்பு மூட்டையைத் தூக்கி எறிந்துவிட்டுப் பெரிய சுமையைக் குறைத்துவிட்டதாக ஆங்கில அரசு மகிழ்வதாகவும், யானை தன் மனத்திலே என்ன எண்ணம் வைத்திருக்கிறதோ யார் அறிவார்? என்ற வினாவையும் பாரதி படவிளக்கத்தில் குறிப்பிட்டு எழுதியுள்ளமை அவரது நுட்பமான வெளிப்பாட்டு உத்தியைக் காட்டுகிறது.





## சுதேசி ஒளிக்கு அஞ்சும் ஆந்தைகள்

மிதவாதிகளை எள்ளி நகையாடுதல் போலவும், ஆங்கிலேய அரசை விமர்சிப்பது போலவும் கருத்துப்படங்கள் அமைந்திருந்தன. நாடு விரைந்து சுதந்திரம் அடைய போராடியவர்களுக்கு முட்டுக்கட்டை போட்ட மிதவாதிகளைப் பாரதி தயக்கமின்றி எதிர்த்து எழுதினார். சித்திரம் ஒன்றில் அவர்களைச் 'சுதேசி ஒளிக்கு அஞ்சும் ஆந்தைகள்' என்று பழித்தார். இவர்களை நிதானக் கட்சியினர், பழைய கட்சியினர் என்று அழைத்தார். அத்துடன் உலக அரசியல் நிகழ்வுகளைக் கூறியும் மிதவாதிகளை விமர்சித்தார். ''கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி'' (*23.3.1907*) என்று அமெரிக்கா, ஜப்பான் நாடுகளின் அரசியல் சூழ்ச்சிகளைப் படம் பிடித்துக்காட்டியுள்ளார்.



## சுதேசிக் கப்பலின் கருத்துப்படம்

பாரதியின் கருத்துப்படங்களில் தமிழகத்தைக் குறித்த படங்கள் மிகவும் குறைவு. இதற்குக் காரணம், பாரதியின் கனவு தேசியமே. ஆனால், சுதேசிக்கப்பலின் தேவையை உணர்ந்து நான்கு படங்களை வரைந்துள்ளார். இதில் மூன்று படங்கள் சுதேசிக்கப்பலுக்கு உதவுவது நமது கடமை என்பதனை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளது. ஒன்றில் பாரதமாதா தம் மக்களிடம் "இதற்கு உதவுங்கள்" என்று கூறுவதாக அமைத்திருக்கின்றது.



11th Advance Tamil - FINAL.indd 200 14-02-2019 17:28:24



## பாரதியின் கருத்துப்படக் கனவு

முழுவதும் கேலிச்சித்திரம் அடங்கிய இதழையும் வெளியிடும் எண்ணம் பாரதிக்கு இருந்தது. மேலும், 'இந்தியா' இதழில் முதல் பக்கச் சித்திரம் மட்டுமல்லாது ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள முதன்மை நிகழ்வுகளை விளக்கும் பொருட்டும் சித்திரம் வரைவதற்குத் தாம் எண்ணியுள்ளதாகவும் பாரதி கூறுகிறார். (இந்தியா இதழ்–13.3.1909).

## கருத்துப்படத்தின் வெற்றி

கருத்துப்பட வடிவத்தினை இவ்வளவு வெற்றிகரமாகப் பயன்படுத்திக் காட்டியவர் பாரதியே. கருத்துப்படங்களுக்காகவே 'இந்தியா' இதழினை அனைவரும் விரும்பிப் படித்தனர். பாரதியின் கருத்துப்படங்களைப் பற்றிப் பாரதிதாசன் எழுதும்போது, "அந்தச் சித்திரம்தான் முதலில் என்னை அவர்தம் பரிவாரங்களின் பக்கமாக இழுத்தது. அந்தச் சித்திரம்தான் என்னை இன்னாரென்று எனக்குக் கூறிற்று" என்று கூறுவதிலிருந்து, பாரதியின் கருத்துப்படத்திற்குக் கிடைத்த வெற்றியினை நாம் அறியலாம்.

### அறிவோம் தெளிவோம்

**இந்திய அளவிலான இதழியல் படிப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்களுள் சில.....**

1. வெகு மக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம், புது தில்லி. (Indian Institute of Mass Communication. New Delhi.)
2. இதழியல் மற்றும் நவீன ஊடகங்களுக்கான இந்திய நிறுவனம், பெங்களூரு (Indian Institute of Journalism and News Media, Bangalore.)
3. முதுரா தகவல் தொடர்பு நிறுவனம், அகமதாபாத் (Mudura Institute of Communications, Ahamadabad.)
4. ஆசிய இதழியல் கல்லூரி, சென்னை. (Asian College of Journalism, Chennai.)
5. சிம்பியோசிஸ் தகவல் தொடர்பு நிறுவனம், புனே. (Symbiosis Institute of Mass Communication. Pune.)
6. சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம், மும்பை (Xavier Institute of Communication, Mumbai.)
7. எ.ஜெ. கித்வாய் மக்கள் தொடர்பு ஆராய்ச்சி, ஜமியா, புதுதில்லி. (AJ Kidwai Mass Communication Research, Jamia, New Delhi.)
8. மனோரம்மா தகவல் தொடர்புப் பள்ளி, கோட்டயம், கேரளா. (Manoramma School of Communication, Kottayam, Kerala)
9. இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம், புனே. (Film and Television Institute of India, Pune.)
10. டைம்ஸ் இதழியல் பள்ளி, புதுதில்லி. (Times School of Journalism, New Delhi.)
11. திரைப்படக் கல்லூரி, அடையாறு, சென்னை.
12. அண்ணா பல்கலைக் கழகம், சென்னை ( ஊடக அறிவியல் துறை)
13. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி.
14. ஸ்யாம் இந்திய அரசு நிறுவனம் (இணையவழிக் கல்வி)



11th Advance Tamil - FINAL.indd 201 14-02-2019 17:28:24

## பெரியார் (1879 – 1973)

### எழுத்துச் சீர்திருத்தம்


பெரியாரின் வாழ்க்கை, சமுதாயச் சீர்திருத்தத்திற்கான வரலாறாகும். சமயமற்ற, சாதிபேதமற்ற ஒரு சமத்துவச் சமுதாயமாக நாடு திகழவேண்டும் என்பதே பெரியாரின் குறிக்கோளாக இருந்தது.

அவரது குறிக்கோள்களை நிறைவேற்ற, ஆட்சியில் பங்கேற்காமல் ஆட்சியாளர்களை இயக்கிய ஆளுமையாகத் திகழ்ந்தார். அவரின் கொள்கைகளை மக்களிடையே கொண்டுசேர்க்கப் பயன்பட்ட கருவிகள் இரண்டு; ஒன்று மேடைப்பேச்சு; மற்றொன்று எழுத்து. மேடைப்பேச்சு, அவரது நேரிடையான களப்பணிக்கு உதவியது. எழுத்து, அவரது கொள்கைகளை மிகப்பெரிய வீச்சில் மக்களிடையே கொண்டு சென்றது. தமது எழுத்துகளை வெளியிடத் தாமே இதழ்களைப் பொறுப்பேற்று நடத்தியதன்மூலம், அவர் ஒரு புரட்சிகரமான இதழாளராகவும் அறியப்படுகிறார்.

தமிழகத்தில் இதழ்களின் தாக்கத்தால் மக்களையும், தலைவர்களையும் ஒருங்கிணைத்ததில் பெரியாருடைய இதழ்ப்பணி முதன்மையானது. எதனையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று ஆய்வுக்கு உட்படுத்தும் பகுத்தறிவை மக்களிடம் வளர்ப்பதையே ஓர் இதழாளராக, பெரியார் தமது நோக்கமாகக் கொண்டிருந்தார்.

### பெரியாரும் இதழ்ப்பணியும்

பெரியார், நாட்டின் சமூக, அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைப்பற்றி மிக விரிவான பரப்புரைகளை மேற்கொண்டார். அவரின் சுயமரியாதை, சமதருமம், பெண்ணுரிமை, வகுப்புரிமை போன்ற பரப்புரைகளை வெளியிட எந்த இதழும் முன்வரவில்லை. எனவே, தெளிவும் திட்பமும் உடைய நோக்கத்தினை மக்களிடையே கொண்டுசெல்லவேண்டும் என்று விரும்பிய பெரியார் நாளிதழ் ஒன்றைத் தொடங்க எண்ணினார். 1922இல் கோயம்புத்தூர்



சிறையில் தம் நண்பர் தங்கப்பெருமாளோடு இருக்கும்போது, 'குடி அரசு' என்னும் பத்திரிகையைத் தொடங்க முடிவு செய்தார். அதன்படி 02.05.1925 முதல் 'குடி அரசு' வார இதழைத் தொடங்கினார்.

1935இல் நீதிக்கட்சிக்காக, வாரம் இருமுறை ஏடாகத் தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரால் தொடங்கப்பட்ட 'விடுதலை', சிறிதுகாலம் கழித்து, பெரியாரின் பொறுப்பிற்கு வந்தது. பின்னர், அது நாளிதழாக மாற்றம் பெற்றது. பெரியார் பல்வேறு இதழ்களில் பணியாற்றினாலும் 'குடி அரசு' இதழும்,



PHONE No. 86977.

LEADING TAMIL DAILY

விடுதலை

VIDUTHALAI

திராவிடர் தமிழ்த் தினசரி

தமிழ்நாடு அசெம்பிளியில் பெரியார் கருத்து எதிரொலி



11th Advance Tamil - FINAL.indd 202 14-02-2019 17:28:25

'விடுதலை' இதழுமே அவரின் முழுமையான மனக்கருத்தை வெளிப்படுத்தின.

தாம் பகுத்தறிந்து கண்டதைப் பிறருக்குச் சொல்லுதல், இதழ்களின் மூலம் கொள்கையை விளக்கி ஒத்த கருத்துடைய மக்களை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் குடி அரசு, விடுதலை இதழ்களில் எழுதி வந்தார். மேலும் புரட்சி, பகுத்தறிவு, ரிவோல்ட் (ஆங்கிலம்) ஆகிய இதழ்களையும் நடத்தினார்.

பெரியார் குடி அரசு, விடுதலை ஆகிய இதழ்களில் பெண் விடுதலை, இந்தியச் சமூக அமைப்பு, அதில் பிற்படுத்தப்பட்டோரின் நிலை, சுயமரியாதையோடு கூடிய அரசியல் சுதந்திரம்,


R. No. M. 2041 "KUDI-ARASU"

குடி அரசு

தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாடு

"நான் சாதாரணமாக ஒரு வெறும் பேச்சாளியல்ல அல்லது விஷயங்களை எல்லாம் படித்து அறிந்து மக்களுக்கு எடுத்துச் சொல்லும்படியான படிப்பாளியும் அல்ல நான் ஒரு கருத்தாளி. உலகத்தைப் பார்த்து, எப்படி நடந்தால் அவர்களுக்கும், நாட்டுக்கும் நல்லது என்று நான் சொந்தமாகக் கொண்ட கருத்தினைக் கூறிவருபவன்" என்றும் "என்னைப் பொருத்த வரையிலும், நான் என்றும் கட்சிக்காரனாக இல்லை. எப்பொழுதும் நான் ஒரு கொள்கைக்காரனாகவே இருந்தேன்" என்றும் தனது விடுதலை இதழில் பெரியார் எழுதியுள்ளார். இதிலிருந்து அவர் மக்களிடம் தாம் சிந்தித்த கருத்துகளை அவர்களின் நலம் சார்ந்து கூறுபவர் என்பது நமக்குப் புலனாகிறது.

சமயம் சார்ந்த கருத்தாடல்கள், பொருளியல் கொள்கை போன்றவற்றை எழுதியதன் மூலம் மிகச்சிறந்த எழுத்தாளராகவும் அறியப்படுகிறார்.

### பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம்

உலகில் நடைமுறையில் உள்ள பெரும்பாலான மொழிகள் ஓசை, குறியீடு, வடிவம், எழுத்துகள் குறைப்பு, தேவையான எழுத்துகள் சேர்ப்பு ஆகிய செயல்களால் தொடர்ந்து மாறுதல் அடைந்துகொண்டே இருக்கின்றன. வளர்ந்து வரும் நவீன காலகட்டத்தின் தேவைக்கேற்பத் தமிழ் மொழியில் குறிப்பாக, அதன் எழுத்துருக்களில் மாற்றங்கள் தேவை என்று பெரியார் கருதினார்.

தமிழைக் கற்போர் மற்றும் பயன்படுத்துவோர்க்கு எளிமையாகவும் சுமை இல்லாமலும்எழுத்துருக்கள் இருக்கவேண்டும். மேலும் தமிழை விரைவாகவும் வடிவ ஒழுங்கோடும் அச்சிடுவதற்கு எழுத்துருக்களில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையை அவர் வலியுறுத்தினார்.

### பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தப் பரிந்துரை

உயிர்மெய் எழுத்துகளான 18 எழுத்துகளிலும் ஒவ்வொன்றுக்கும் உள்ள இ-கரம், ஈ-காரம், உ-கரம், ஊ-காரம் ஆகிய நான்கு ஓசைகள் கலந்த எழுத்துகள் தனித்தனி வடிவத்தில் அதாவது கி, கீ கு, கூ என்றமைந்த முறையில் தனித்தனியாக ($18 \times 4$) 72 எழுத்துருக்களாக இருந்து வருகின்றன.

இந்தத் தனித்தனி வடிவங்கள் தேவையில்லை அனைத்து உயிர்மெய் எழுத்துகளுடனும் ஆ-காரம், ஏ-காரம் ஆகிய ஓசைகளுக்கு ா, ே ஆகிய குறியீடுகளைச் சேர்த்து கா, கே என்று ஆக்கிக்கொள்வதுபோல கி, கீ கு, கூ ஆகிய ஓசைகளுக்கும் நாம் தனிப்பட்ட ஒரு குறியீட்டைச் சேர்த்துக்கொள்ள முடியும்.

எழுத்துக்காட்டாக ஜ, ஷ ஸ போன்ற வடமொழி எழுத்துகளோடு உ -கர, ஊ-கார ஓசைகளுக்கு கு, கூ போன்ற தனி எழுத்துகள்

இல்லாமல் உ-கரத்துக்கு ு என்ற குறியையும் ஊ-காரத்துக்கு ூ என்ற குறியையும் பயன்படுத்தி ஜு, ஜூ, ஷு, ஷூ, ஸு, ஸூ, ஹு, ஹூ என்றவாறு ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதுபோல் தமிழ் எழுத்துகளிலும் கி, கீ, கு, கூ போன்றவற்றோடு ு, ூ என்ற குறிகளைச் சேர்த்தால் அச்சில் 72 தனி எழுத்துகள் தேவையில்லை என்பதோடு தமிழ் கற்கும் மாணவர்களுக்கும் சுமை குறையும் என்று பெரியார் கூறியுள்ளார்.

## பெரியார் நடைமுறைப்படுத்திய எழுத்துரு மாற்றம்

பெரியார்தாம் நடத்திய பகுத்தறிவு இதழில் (30.12.1934) தாம் மேற்கொள்ளப்போகும்

| பழைய வடிவம் | சீர்திருத்த வடிவம் | சான்று |
|---|---|---|
| ணா | ணா | அண்ணா - அண்ணா |
| ணை | ணை | அணை - அணை |
| ணொ | ணொ | மண்ணொடு - மண்ணொடு |
| ணோ | ணோ | கண்ணோடு - கண்ணோடு |
| லை | லை | தலை - தலை |
| ளை | ளை | களை - களை |
| றா | றா | சிறார் - சிறார் |
| றொ | றொ | மற்றொரு - மற்றொரு |
| றோ | றோ | காற்றோடு - காற்றோடு |
| னா | னா | மன்னா - மன்னா |
| னை | னை | வினை - வினை |
| னொ | னொ | என்னொடு - என்னொடு |
| னோ | னோ | என்னோடு - என்னோடு |

எழுத்துரு மாற்றங்கள் குறித்து அறிவித்தார். அதற்கு அடுத்த இதழிலிருந்து அட்டவணையில் உள்ளபடி எழுத்துருக்களை மாற்றம் செய்து பதிப்பித்தார்.

## டி.எஸ்.சொக்கலிங்கம் (1899 – 1966)

### தலையங்கம்

1934இல் தினமணி நாளிதழ் தொடங்கப்பட்டபோது அதன் முதல் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர் டி.எஸ்.சொக்கலிங்கம். இவர், தமது தலையங்களுக்காகவும், கட்டுரைகள் மற்றும் கருத்துப்படங்களுக்காகவும் அறியப்படுகிறார். நாளிதழ்கள் என்பவை வீடு வீடாகச் சென்று விற்கும் பொருளாக இல்லாமல் மக்கள் முந்திச் சென்று வாங்கும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும் என்று கருதினார்.



இதழாளராகவும் எழுத்தாளராகவும் விளங்க ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமையுடையவராய் இருத்தல் வேண்டும் என்ற கருத்தாக்கத்தை உடைத்தார். மக்கள் செய்யவேண்டியதைத் தலையங்கம் மூலம் உணர்த்தும் ஆற்றல் இவரின் எழுத்துகளில் இருந்தது.

மக்களாட்சி உரிமைகளைக் காக்கும் இதழியல் பணியில் வருமானம் குறைவாக இருந்தாலும் அதில் மகிழ்ச்சி கண்டார். காந்தி, தினமணி, தினசரி, ஜனயுகம், நவசக்தி போன்ற இதழ்களில் பணியாற்றினார். தம் நாளிதழ் வளர வேண்டும் என்பதைவிட மக்களைப் பாதிக்கும் சிக்கல்கள் தீரவேண்டும் என்பதே இவரின் முதன்மை நோக்கமாக இருந்தது.

1934ஆம் ஆண்டு 'காந்தி' இதழில் பீகார் நிலநடுக்கத்தையொட்டி, 'சர்க்கார் எங்கே?' என்ற தலைப்பில் தலையங்கம் எழுதினார். இதனால், ஆங்கிலேய அரசு இவர் மீதும் இவ்விதழின் மீதும் தேசத்துரோகக் குற்றம்சாட்டி வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கில் முன்பிணை (முன்ஜாமின்) வழங்கப்படாததால் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்து வெற்றி பெற்றார். இவர் தினசரி என்ற நாளிதழில் 'ராஜபாட்டை' என்ற



11th Advance Tamil - FINAL.indd 204 14-02-2019 17:28:25

தலைப்பில் எழுதிய அரசியல் சிந்தனைக் கட்டுரைகளும், 'ஊதல், உண்ணல், உறிஞ்சல்' என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எழுதிவந்த எழுத்தோவியங்களும் பரவலான வரவேற்பைப் பெற்றன.

லியோ டால்ஸ்டாயின் புகழ்பெற்ற 'போரும் அமைதியும்' நாவலைத் தமிழில் மொழிபெயர்த்தார். இதழாளர்களுக்குப் பயன்படும் வகையில் ஆங்கில – தமிழ் அகராதியை உருவாக்கினார். விடுதலை போராட்டக் காலத்தில் டி.எஸ். சொக்கலிங்கத்தின் தலையங்கங்களும், கட்டுரைகளும் வீறுமிக்க வகையில் அமைந்து மக்களிடையே விடுதலைவேட்கையைத் தூண்டின. தமது தலையங்கங்களுக்காகத் தினமணி புகழ்பெற்றிருப்பதற்கு மூலகாரணமாக அமைந்தவர் டி.எஸ்.சொக்கலிங்கம் என்றால் மிகையாகாது.

### ஆங்கிலேய அரசைப் பணியவைத்தவர்

குற்றாலம் அருவியில் வெள்ளையரைத் தவிர வேறு யாரும் குறிப்பிட்ட நேரத்தில் குளிக்கக்கூடாது என்ற அறிவிப்புப் பலகையைத் தொங்கவிட்டிருந்தார்கள். அந்தப் பலகையை எடுக்க வேண்டுமென்று சொக்கலிங்கம் அறப்போர் நடத்தினார். இருபதே வயது நிறைந்திருந்த டி.எஸ். சி.யின் அறப்போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு வலுத்தது. நாடெங்கும் இந்த அறப்போராட்டச் செய்தி பரவியது. "தேச பக்தன்" நாளிதழ், இளைஞர் சொக்கலிங்கத்தின் போராட்டத்தை ஆதரித்து எழுதியது. இக்கிளர்ச்சிக்கு ஆங்கிலேய அரசு பணிந்தது. உடனே அந்த அறிவிப்புப் பலகை அகற்றப்பட்டது.

## சி.பா. ஆதித்தனார் (1905 – 1981)

### மொழிநடை

ஒரு செய்தித்தாள் என்பது, மெத்தப் படித்தவர்களுக்கு மட்டுமல்லாது சாதாரண வாசகனுக்கும் சென்று சேர வேண்டுமென்றால் அது எளிய மொழிநடையில் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். பேச்சுத்தமிழைக் கொச்சை நீக்கி, மக்களின் மொழியில் எழுதவேண்டும் என்பது, ஆதித்தனார் தமது நாளிதழ்களுக்காக ஏற்படுத்திய பொன்விதி.



### ஜவஹர்லால் நேருவின் வியப்பு

1951–52இல் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது தினத்தந்தி நாளிதழ் 3 இலட்சத்திற்கும் மேலாக விற்பனையானது. பத்திரிகைப் பதிவாளரின் அறிக்கையில் இந்த விவரங்களைப் படித்த நேரு வியப்படைந்து, 'தமிழ் ஒரு மாநில மொழி, அப்படியிருந்தும் இந்தியப் பத்திரிகைகளைவிடத் தமிழ்ப் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாகின்றன'. இதற்குக் காரணம் என்ன என்று அலுவலர்களிடம் விசாரித்தார். "தினத்தந்தி, ராணி ஆகிய சி.பா. ஆதித்தனாரின் இதழ்கள் அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய பேச்சுத் தமிழில் நடத்தப்படுகின்றன. ஆகவே அவை அதிகமாக விற்பனை ஆகின்றன" என்று நேருவிடம் தெரிவித்தார்கள்.

அதன்பின் நடந்த பத்திரிகை ஆசிரியர்கள் மாநாட்டில் இதுபற்றி நேரு குறிப்பிடும்போது, "தமிழ்ப் பத்திரிகைகள் எளிய நடையில் எழுதப்படுவதால் அதிகமாக விற்பனையாகின்றன. இந்தியப் பத்திரிகைகள் கடினமான இலக்கிய நடையைக்கையாள்வதால் குறைவாக விற்பனையாகின்றன. அவர்கள் எழுதுவதை என்னால்கூடப் புரிந்துகொள்ள முடிவதில்லை. அவர்கள் கடின நடையைக்



11th Advance Tamil - FINAL.indd 205 14-02-2019 17:28:25

## படிப்போம் சுவைப்போம்

### சி.பா. ஆதித்தனாரின் பத்திரிகை எழுத்தாளர் கையேட்டிலிருந்து ...

கள்ள ரூபாய் நோட்டுச் செய்தியை எழுதும்போது 'கத்தை கத்தையாக நோட்டு அச்சடிப்பு' என்றும் அரசாங்கம் நோட்டு அச்சடிக்கும்போது 'கோடிக்கணக்கில் ரூபாய்நோட்டு அச்சடிப்பு' என்றும் சொல்லவேண்டும்.

மாவட்டத் தலைநகரங்களில் உள்ள தலைமை ஆஸ்பத்திரியைப் 'பெரிய ஆஸ்பத்திரி' என்று எழுதவேண்டும்.

மாஜி மந்திரி சேலம் ஜில்லாவுக்கு வருகை தந்தபோது இந்தப் பிரச்சினை சீக்கிரமே விவாதிக்கப்படும் என்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்கக்கூடாது என்றும், பாரபட்சமற்ற லெவி உத்தியோகஸ்தர்களுக்குப் போலிஸ் பந்தோபஸ்து அளிக்கப்படும் என்றும் சொன்னார்.

மேலே குறிப்பிட்டிருக்கும் தொடரை ஆதித்தனாரின் கையேட்டின்படி திருத்தினால், 'முன்னாள் அமைச்சர் சேலம் மாவட்டத்திற்கு வந்தார், இந்தச் சிக்கல் விரைவில் தீர்ந்துவிடும், கடையடைப்பு கூடாது. ஒருதலையாக இல்லாமல் கொள்முதல் அதிகாரிகளுக்குக் காவல் பாதுகாப்புத் தரப்படும்.' இவ்வாறு அவர் சொன்னார் என்று மாறும்.

செய்வினையில் எழுத வேண்டும்.

'காரால் மோதப்பட்டு கிழவி சாவு' – தவறு 'கார் மோதி கிழவி சாவு' – சரி

ஒரு வாக்கியத்தை எந்த இடத்தில் நிறுத்திப் படித்தாலும் தவறான பொருள் கொடுக்கும்படி எழுதக்கூடாது.

'உணவு அமைச்சர் மண்டையைப் பிளக்கும் வெயிலில் துறைமுகத்தைச் சுற்றிப் பார்த்தார்.' – தவறு

'மண்டையைப் பிளக்கும் வெயிலில் உணவு அமைச்சர் துறைமுகத்தைச் சுற்றிப் பார்த்தார்.' – சரி

தலைப்பில் கூடியவரை ஒரே கதாநாயகன் அல்லது நாயகிதான் இருக்கவேண்டும். சுப்பிரமணியம் மனைவி மகளுடன் அமெரிக்கா போவதற்குப் பதிலாக சுப்பிரமணியம் அமெரிக்கா போகிறார். மனைவியையும் அழைத்துச் செல்கிறார் என்று இரண்டாகப் பிரிப்பது நல்லது.

கைவிட்டு எளிய நடையைப் பின்பற்றி எழுதவேண்டும்" என்றார். இதன்பிறகு, இந்திய நாளிதழ்கள் சி.பா.ஆதித்தனாரின் மொழிநடையைப் பின்பற்ற ஆரம்பித்தன.

### ஆதித்தனாரின் எழுத்துநடை பற்றி எழுத்தாளர் சுஜாதா

செய்தித்தாள் வாசித்தல் என்பது, நன்கு படித்தவர்களுக்கான செயல் என்கிற காலம்மாறிச் சற்றே தமிழ் தெரிந்தவர்களும் படிக்குமாறு தமிழை எளிமைப்படுத்தி, கொஞ்சம் பரபரப்புச் சேர்த்து, குழப்பம் இல்லாத வகையில் செய்தியைத் தரும் உத்தியைத் தமிழ்நாட்டில் முதலில் கொண்டுவந்தவர் ஆதித்தனார். அவர், எழுத்துநடை குறித்துப் பத்திரிகை எழுத்தாளர் கையேடு என்ற பெயரில் ஒரு வழிகாட்டி நூலை வெளியிட்டிருக்கிறார். பேச்சுத்தமிழைக் கொச்சை நீக்கி எழுது என்பதே இக்கையேட்டின் பொன்விதி. 'நான்மாடக்கூடலை நண்ணினோம்' என்று சொல்வதற்குப் பதில் 'மதுரைக்குப் போனோம்' என்று சொல்லவேண்டும். புரிகிற தமிழில் மட்டும் எழுதினால் போதாது, பேசுகிற தமிழில் எழுதவேண்டும்.

ஆதித்தனார் எழுத்துக்கூட்டிப் படிப்பவர்களையும் மனத்தில் வைத்துத்தான் இதழ் நடத்தினார். ஆகவேதான், கலைச்சொற்களைத் தவிர்த்துப் பேச்சுமொழிச்சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தினார். "செந்தமிழில் எழுதுவது பெருமையாகக் கருதப்படுகிறது. அவ்வாறு நாளிதழில் எழுதினால் அது பலருக்குப் புரியாது. பேச்சுத்தமிழையே எழுதவேண்டும். இதுவே தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஒரு நாளிதழ் செய்யவேண்டிய தொண்டு" என்று ஆதித்தனார் குறிப்பிட்டுள்ளார்.



11th Advance Tamil - FINAL.indd 206 14-02-2019 17:28:25

பயிற்சியற்ற வாசகர்களின் படிப்பறிவை வளர்ப்பதைத் தம் நோக்கமாகக் கொண்ட அவர், தமது தினத்தந்தி நாளிதழின் மொழிநடையை அவர்களுக்கு ஏற்றாற்போல் எளிமையாக அமைத்துக்கொண்டார். இவ்வாறு தமது மொழிநடையால் பாமரரையும் நாளிதழ் படிக்கவைத்தன் மூலம் ஆதித்தனார் இந்தியப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

## ஏ.என். சிவராமன் (1904 – 2001)

### அறிவியல் கட்டுரைகள்



தினமணி நாளிதழின் ஆசிரியரான ஏ.என். சிவராமன் தமது அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கட்டுரைகளுக்காக அறியப்படுகிறார். இவர், தொடக்கக் கல்வியைத் திருநெல்வேலியில் பயின்றார். தமது பதினேழாவது வயதில் காந்தியின் அழைப்பினை ஏற்று ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றுச் சிறைத்தண்டனையைப் பெற்றார். இதனால், இவரது கல்லூரிப் படிப்பு இடையிலேயே தடைப்பட்டது. பின் காங்கிரஸ் கட்சியில் இணைந்து தொண்டாற்றினார். பின்னர் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றிய போது வரலாறு, அரசியல், தத்துவம், பொருளாதாரம் ஆகிய துறைகளின் நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இக்காலகட்டத்தில் அவர் வாசித்துச் சேர்த்த அறிவே, அவர் சிறந்த பத்திரிகையாசிரியராக விளங்க அடித்தளமாக அமைந்தது. ஒரு நாளில் எட்டு மணி நேரத்தை வாசிப்புக்காகச் செலவிடுவதைத் தமது வழக்கமாகக் கொண்டிருந்தார்.

1988ஆம் ஆண்டு, இவர் தமது சிறந்த இதழியல் பணிகளுக்காகக் 'கோயங்கோ விருது' பெற்றார். இவர் பிரெஞ்சு, சமஸ்கிருதம், உருது உள்ளிட்ட பதினேழு மொழிகளை அறிந்திருந்தார் என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

டி.எஸ்.சொக்கலிங்கம் நடத்திய 'காந்தி' இதழில் ஒரு பத்திரிகையாளராகத் தம் பணியைத் தொடங்கிய ஏ.என்.சிவராமன், பின் அதிலிருந்து விலகி வேதாரண்யத்தில் இராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றார். 1934 இல் டி.எஸ்.சொக்கலிங்கம் தினமணி ஆசிரியராகப் பொறுப்பேற்றவுடன் சிவராமன் அதில் துணையாசிரியராக இணைந்தார்.

சொக்கலிங்கம் மறைவுக்குப் பின்னர்த் தினமணியின் ஆசிரியராகப் பொறுப்பேற்ற சிவராமன் 1987 வரை பணியாற்றினார். ஒரு செய்தித்தாளின் பணியென்பது, செய்திகளை ஆதாரப்பூர்வமாகவும் துல்லியமாகவும் வழங்குவது மட்டுமன்று; ஒரு நாட்டின் ஜனநாயகத் தன்மையிலும் வளர்ச்சியிலும் வாசகர்களைப் பங்கேற்கச் செய்வதுமாகும் என்று ஏ.என். சிவராமன் கருதினார்.

விண்வெளி, அறிவியல், அரசியல் தத்துவங்கள், தேர்தல் சீர்திருத்தம், வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்கள், கலாச்சாரப்பதிவுகள் ஆகியவற்றை எளிய தமிழில் மக்களிடையே கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர் ஏ.என். சிவராமன்.

## ஜி. கஸ்தூரி (1924 – 2012)

### தொழில்நுட்பம், வணிக உத்தி

திரு. ஜி.கஸ்தூரி தி ஹிந்து ஆங்கில நாளிதழில் 1965 முதல் 1991 வரை ஆசிரியராகப் பணியாற்றியவர். அவர், செய்தித்தாள் விநியோகத்தில் மேற்கொண்ட புதுமையான முயற்சிகளுக்காகவும், அச்சுத் தொழில்நுட்பத்தில் கையாண்ட நவீன முறைகளுக்காகவும் பத்திரிகை உலகில் போற்றப்படுகிறார்.

இந்தியாவில் தொலைக்காட்சி பயன்பாட்டிற்கு வந்தபோது அதனைச் செய்தித்தாளுக்கான போட்டியாகக் கருதினார். செய்தித்தாள்கள் அதனை ஈடு செய்யும் வகையில் செய்திகளை வழங்குவதில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்; பல்வேறு ஆதாரங்களில் இருந்து வெவ்வேறு வடிவங்களில் செய்திகளை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர் செயல்பட்டார்.

மக்கள் செய்திகளின் உள்ளடக்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த நம்பகத்தன்மையே ஒரு நாளிதழின் மிகப்பெரும் சொத்து எனக் கருதினார். தென்னகம் முழுமைக்கும் விரைவாக அதிகாலையிலேயே நாளிதழ்கள் கிடைக்கும்பொருட்டு, முதன்முதலில் விமானச்சேவையைப் பயன்படுத்தியது அவரது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

செய்திகளை விரைந்து சேகரிக்க மாவட்ட, மாநிலத் தலைநகரங்களில் முதன்மைச் செய்தி அலுவலர்களை (STAFF CORRESPONDENT) நியமித்தது அவரது புதுமையான முயற்சியாகும். 1977இல் அவர் தி ஹிந்து நாளிதழில் அறிமுகப்படுத்திய OUTLOOK, SPECIAL REPORT, OPEN PAGE ஆகிய பகுதிகள் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன.

நாளிதழின் அச்சமைப்பில் நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் முன்னோடி ஜி.கஸ்தூரி. சென்னைத் தலைமை அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்ட தி ஹிந்து நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து, (Facsimile Transmission System) பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை முதலில் தொடங்கியவர் இவரே. ஆசியாவிலேயே முதன்முறையாகச் செயல்படுத்தப்பட்ட இம்முறையினால் செய்தித்தாள் விநியோகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியினைச் சாத்தியப்படுத்தினார். இம்முறையிலான முதல் வெளியூர்ப் பதிப்பு 1969இல் கோயம்புத்தூரிலிருந்து வெளிவந்தது.



1980இல் உலோக எழுத்துருக்களைக் கோத்து அச்சிடும் முறையிலிருந்து தட்டச்சு செய்து பக்கங்களைத் தயார் செய்யும் முறைக்கு மாறியபோதும் பின்னர், ஒளியச்சுக் கோவைக்கு மாறியபோதும் அவர் ஏற்கெனவே பணிபுரிந்து கொண்டிருக்கும் எந்தவொரு ஊழியரையும் மாற்றவில்லை. மாறாக அவர்களுக்கு நவீனத் தொழில்நுட்பத்தில் போதுமான அளவில் பயிற்சியளித்துத் தொடர்ந்து பணியாற்ற வாய்ப்பளித்தார். 1990இலிருந்து மின்னணுப்பக்கங்களாகப் பரிமாற்றம் செய்யப்படுகிறது தி ஹிந்து நாளிதழ்.

வண்ண அச்சுமுறை நடைமுறைக்கு வந்தபோது வண்ணப்படங்களுக்காகவே தி ஹிந்து நாளிதழும் அதன் குழும இதழ்களும் புகழ்பெற்றன. நேர்த்தியான புகைப்படக் கலைஞன் ஒருவனின் கைவண்ணத்தில் உருவாகும் ஒரு வண்ணப்படம் அதே தரத்துடன் நாளிதழில் வெளியாகும்போதும் அமையவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். கஸ்தூரி, தமது தொலைநோக்குமிக்க வாணிக மேலாண்மையாலும், காலத்திற்கேற்ற நவீனத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தியதிலும் தேசிய அளவில் நாளிதழ் ஆசிரியர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.



11th Advance Tamil - FINAL.indd 208 14-02-2019 17:28:25

## வை.மு. கோதைநாயகி (1901 – 1960)

### மகளிர் இதழ்

வை.மு. கோதைநாயகி. 1925இல் "ஜகன்மோகினி" என்னும் நாவல் இதழினை அதன் பதிப்பாளராகவும் ஆசிரியராகவும் இருந்து நடத்தியவர். முதலில் மாத நாவலாக வெளிவந்துகொண்டிருந்த "ஜகன்மோகினி" 1937-இல் மகளிருக்கான இதழாகத் தன்னை மாற்றிக்கொண்டது. பண்டிதத் தமிழில் ஏனைய பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்த நிலையில் எளிய நடையில் பாமரரும் படித்தறியும் வகையில் இவர் எழுதியதும் ஜகன்மோகினியின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம்.

தமிழ் இதழியல் வரலாற்றில் முதன்முறையாக ஒரு பெண்ஆசிரியர் பொறுப்பேற்று நடத்திய 'ஜகன்மோகினி' இதழ் வெள்ளிவிழா கொண்டாடியது ஒரு சாதனையாகும். இன்றைய மகளிர் இதழ்களின் தவிர்க்க முடியாத தன்மையாக விளங்கும் சமையல், கோலம், அழகுக் குறிப்பு, சோதிடம் போன்றவை அன்றைய ஜகன்மோகினியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"ஜகன்மோகினி"யின் துணைவெளியீடாக நந்தவனம் என்ற இதழையும் வெளியிட்டு, அதன்மூலம் நூற்றைம்பதுக்கும்



மேற்பட்ட எழுத்தாளர்களை வை.மு.கோ. அறிமுகப்படுத்தினார்.

35 ஆண்டுகள் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றிய கோதைநாயகி பள்ளிப்படிப்பு இல்லாதவர்.இவர்எழுதியுள்ள 115நாவல்களில் 'அனாதைப்பெண்', 'தயாநிதி' போன்றவை திரைப்படங்களாக வெளிவந்துள்ளன. எழுத்தாளர், பத்திரிகையாளர், தேசியவாதி, இசைக்கலைஞர், திரைப்படத் தணிக்கைக்குழு உறுப்பினர் என்று பன்முகத்தன்மை கொண்டிருந்த வை.மு.கோ. மிகச்சிறந்த இதழாளர் என்பதோடு பின்னாட்களில் உருவான பெண் இதழாளர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினார் .



**படிப்போம் சுவைப்போம்**

வை. மு. கோதைநாயகி, தம் வீட்டருகே உள்ளே சிறுவர் சிறுமிகளுக்குக் கதை சொல்வது வழக்கம். அவர் கதையில், கற்பனைவளம் நிறைந்திருக்கும். அக்கதைகளைக் கேட்டு, அனைவரும் வியப்படைவர். அவருடைய தோழி, டி. சி. பட்டம்மாள் என்பவரும் கதை சொல்லச் சொல்வார். வை. மு. கோவின் கற்பனைக் கதைகளைக் கேட்ட பட்டம்மாள், 'நீ நன்றாகக் கதை சொல்கிறாய், ஏன் கதை எழுதக்கூடாது?' எனக்கேட்டு, அவரைக் கதை எழுதத் தூண்டினார். எழுதப் படிக்கத் தெரியாத வை. மு. கோ. தன்னால் எப்படி எழுத முடியும்? என வருத்தமுற்றார். அவரின் முகக் குறிப்பை உணர்ந்த பட்டம்மாள், 'நீ சொல்லச் சொல்ல நான் எழுதுகிறேன்' என்று கூறி, அவருக்கு ஊக்கமூட்டினார். வை. மு. கோவின் முதல் படைப்பு, 'இந்திர மோகனா' என்னும் நாடகமாகும். பின்னர், எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டு படைப்புகளை வெளியிடத் தொடங்கினார்.



11th Advance Tamil - FINAL.indd 209 14-02-2019 17:28:26

## பிறமொழிச்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| நிருபர் | – செய்தியாளர் | தேசம் | – நாடு |
| வாசகர் | – படிப்பவர் | விமர்சனம் | – திறனாய்வு |
| பத்திரிகை | – இதழ் | சுதந்திரம் | – விடுதலை |
| ஆச்சர்யம் | – வியப்பு | பரிவாரங்கள் | – உறவினர்கள் |
| விஞ்ஞானம் | – அறிவியல் | வசூல் | – தண்டல் |
| சித்திரம் | – ஓவியம் | ஜாமின் | – பிணை |
| சந்ததி | – வழித்தோன்றல் | பிரசுரித்தல் | – வெளியிடுதல் |
| உத்தேசம் | – கருதுகை | தீர்மானம் | – முடிவு |
| அபிவிருத்தி | – மிகுவளர்ச்சி | | |

## கலைச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| Art Editor | – கலைப்பகுதி ஆசிரியர் | Journalism | – இதழியல் |
| Anchor | – நெறியாளர் | Journalist | – இதழாளர் |
| Beat Reporter | – செய்திக்கள நிருபர் | Little Magazines | _ சிற்றிதழ்கள் |
| Bit News | – துணுக்குச் செய்திகள் | Local news | – உள்ளூர்ச் செய்திகள் |
| Bureau | – செய்தி நிறுவனம் | Magazine | – இதழ் |
| Caricature | – கேலிச்சித்திரம் | Mass communication | – செய்தித் தொடர்பு |
| Cartoon | – கருத்துப்படம் | Mass Media | – மக்கள் தொடர்புச் சாதனம் |
| Composing | – அச்சுக்கோத்தல் | News agencies | – செய்தி நிறுவனங்கள் |
| Copy | – படி | News Paper | – செய்தித்தாள் |
| Copy Editor | – எழுத்துப்படி திருத்துநர் | News Services | – செய்திப்பிரிவு |
| Crime News | – குற்றச் செய்திகள் | Page Layout | – பக்க வடிவமைப்பு |
| Editor | – ஆசிரியர் | Part–time reporter | – பகுதிநேரச் செய்தியாளர் |
| Editorial | – தலையங்கம் | Periodicals | – பருவ இதழ்கள் |
| Fake News | – பொய்யான செய்தி | Press Conference | – செய்தியாளர் கூட்டம் |
| Filler | – துண்டுச் செய்திகள் | Print | – அச்சு |
| Graphics | – வரைபடங்கள் | Printed form | – அச்சிட்ட படிவம் |
| Green Proof | – திருத்தப்படாத அச்சுப்படி | Proof | – மெய்ப்புத் திருத்தப்படி |
| Headlines | – தலைப்புச் செய்தி | Proof Reader | – மெய்ப்புத் திருத்துநர் |
| Hot News | – அண்மைச்செய்தி | Publisher | – வெளியிடுபவர், பதிப்பாளர். |
| Illustration | – விளக்கப்படம் | Revised edtion | – திருத்தப்பதிப்பு |
| Impression | – அச்சுப்பதிப்பு | Re–edition | – மறுபதிப்பு |
| Interview | – நேர்காணல் | Reporter | – செய்தியாளர் |
| Interviewee | – நேர்காணல் தருபவர் | Review | – மதிப்புரை |
| Interviewer | – நேர்காணல் நிகழ்த்துபவர் | | |

## கண்ணாடி

9DEYJ8

**விளக்கம் கண்டு விடை தருக.**

1. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளிவரும் இதழ் -------------

2. செய்தித்தாளின் ஒரு பக்கத்தில் எவை, எந்த இடத்தில் எப்படி அமைய வேண்டும் ? எனத் தீர்மானிப்பது -----------------------------

3. உடுக்கின் உருவம்போல அமையும் தலைப்பு இது -------------

4. பொருத்துக.

| **உள்ளடக்கம்** | **இதழின் பெயர்** |
|---|---|
| 1. கல்வி வளர்ச்சி | – அ) சம்பாரத் கௌமதி |
| 2. மருத்துவம் | – ஆ) கலைக்கதிர் |
| 3. பெண் உரிமைகள் | – இ) மூலிகை மணி |
| 4. அறிவியல் | – ஈ) ஜனவிநோதினி |

அ) 1–அ 2–இ 3–ஈ 4–ஆ　　ஆ) 1–ஆ 2–ஈ 3–இ 4–அ

இ) 1–ஈ 2–இ 3–அ 4–ஆ　　ஈ) 1–இ 2–அ 3–அ 4–ஆ

5. பொருத்துக.

| **இதழின் பெயர்** | **ஆசிரியர்** |
|---|---|
| 1. ரிவோல்ட் | – அ. ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி |
| 2. மெட்ராஸ் கூரியர் | – ஆ. பெரியார் |
| 3. பெங்கால் கெசட் | – இ. காந்தி |
| 4. யங் இந்தியா | – ஈ. ரிச்சர்டு ஜான்சன் |

அ) 1–அ 2–இ 3–ஆ 4–ஈ　　ஆ) 1–இ 2–ஈ 3–ஆ 4–அ

இ) 1–ஆ 2–ஈ 3–அ 4–இ　　ஈ) 1–ஆ 2–அ 3–ஈ 4–இ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

6. தமிழ்நாட்டில் முதலில் வெளிவந்த நாளிதழ் எது?

அ) மதராஸ் மெயில்　ஆ) சுதேச மித்திரன்　இ) இந்தியா　ஈ) சக்ரவர்த்தினி

7. மக்களாட்சியின் நான்காவது தூண் என்று அழைக்கப்படுவது எது?

அ) காவல் துறை　ஆ) நிதித்துறை　இ) அரசு நிருவாகம்　ஈ) ஊடகம்

8. பாரதியார், கருத்துப்படங்களை எவ்வாறு அழைத்தார்?

அ) கேலிச்சித்திரம்　ஆ) விளக்கப்படம்　இ) விகடசித்திரம்　ஈ) கூடார்த்த படம்

9. "இதழ்களை அவற்றில் இடம்பெறும் தலைப்புகளே கணிக்கின்றன" என்றவர்



11th Advance Tamil - FINAL.indd 211　　14-02-2019 17:28:26

அ) ஆலன் ஹோம் கோம்ப் ஆ) சி.பா. ஆதித்தனார்

இ) அகஸ்டஸ் ஹிக்கி ஈ) ஏ.என்.சிவராமன்

10. கீழ்க்காணும் இதழ்களுள் விடுதலைப் போராட்ட காலத்தில் வெளிவராதது எது?

அ) சுதேசமித்திரன் ஆ) தேசபக்தன் இ) இந்தியா ஈ) அரும்பு

11. இந்தியாவில் முதன் முதலில் கருத்துப்படம் வெளியிட்ட இதழ்

அ) இந்தியா ஆ) மதராஸ் மெயில்

இ) தில்லி ஸ்கெட்ச் புக் ஈ) அமிர்தபஜார் பத்திரிகா

12. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) இந்தியா – கருத்துப்படம் ஆ) விடுதலை - எழுத்துச் சீர்திருத்தம்

இ) தேசபக்தன் - விடுதலை வேட்கை ஈ) தினத்தந்தி – கடின நடை

13. பொருந்தும் இணையைக் கண்டறிந்து எழுதுக.

அ) பெரியார் - தொழில்நுட்பம் ஆ) ஏ.என்.சிவராமன் - அறிவியல் கட்டுரை

இ) ஜி.கஸ்தூரி- தலையங்கம் ஈ) டி.எஸ்.சொக்கலிங்கம் - பொன்விதி

14. பொருந்தாததனைக் கண்டறிக.

அ) இந்தியா ஆ) பால பாரதி இ) தேசபக்தன் ஈ) விஜயா

15. கூற்று : பெரியார் குடி அரசு என்னும் வார இதழைத் தொடங்கினார்.

காரணம் : தம் கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பினார்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

16. கூற்று : தலையங்கம் ஓர் இதழின் கருத்துக்கண்ணாடி ஆகும்.

காரணம்: அன்றைய நாளிதழின் செய்திகளைத் தொகுத்து வழங்குகிறது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

17. ஜெர்மனியில் புரட்சிக் கருத்துகளைப் பரப்புவதற்குக் கருத்துப்படங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களைப் பயன்படுத்தியவர் --------------------

18. ஆசியாவிலேயே முதல்முறையாக நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து வெளியூர்ப் பதிப்புகளை ஆரம்பித்தவர் ------------

19. சரியான கூற்றுகளைக் கண்டறிக.

அ) பெருஞ்சித்தரனாரின் தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றின.

ஆ) பாரதியாரின் 'பால பாரதம்' என்னும் இதழ் விடுதலை உணர்வைத் தூண்டியது.

இ) 'துளிர்' என்னும் இதழ் பொழுதுபோக்குத் தன்மை கொண்டது.

ஈ) 'தமிழ்க் கல்வி', 'கல்விக் கதிர்' போன்ற இதழ்கள் கல்வி மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட இதழ்கள்.

அ) அ மற்றும் ஆ சரி　　ஆ) அ மற்றும் ஈ சரி

இ) ஆ மற்றும் ஈ சரி　　ஈ) அ மற்றும் இ சரி

20. நாளிதழ்கள், காலை மாலை என இருவேளையும் வெளிவருதற்கான காரணம்.

அ) அவ்வப்போது நடைபெறும் செய்தியை மக்கள் உடனுக்குடன் அறிய


ஆ) மக்களைப் பதற்றத்திலேயே வைத்திருக்க.


இ) வியாபாரத்தைப் பெருக்க.

ஈ) அனைத்து மக்களும் செய்திகளை அறிந்துகொள்ள.

ஆ) அ சரி　　ஆ) அ, இ சரி　　இ) நான்கும் சரி　　ஈ) நான்கும் தவறு

## குறுவினா

1. ஊடகத்தின் வகைகளைக் கூறுக.
2. மக்களாட்சியின் நான்கு தூண்கள் யாவை?
3. இன்றியமையாத செய்திக் களங்கள் யாவை?
4. நாளைமுதல் காலையில் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டம் ஆரம்பம். இச்செய்தியைத் தெளிவுபடத் திருத்தி எழுதுக.
5.  ஆகிய இரண்டு குறிகளும் மெய்ப்புத் திருத்துதலில் எவற்றைக் குறிக்கின்றன?
6. கீழ்க்காணும் கருத்துப்படங்களுக்குப் பொருத்தமான வாசகத்தை உருவாக்குக.





7. தலைகீழ்க் கூம்புத் தலைப்பு என்பது யாது?
8. சமநிலைப் பக்க அமைப்பைச் சுட்டுக.
9. கருத்துப்படத்திற்கான வேறு பெயர்களை எழுதுக.
10. ஆதித்தனார் இதழாளர்களுக்குக் கூறும் பொன்விதி யாது?



11th Advance Tamil - FINAL.indd 213　　14-02-2019 17:28:26

## சிறுவினா

1. தலையங்கம் – குறிப்பு வரைக.
2. இதழ் உருவாக்கம் குறித்து எழுதுக.
3. பருவ இதழ்களை வரையறுக்க.
4. கொடுக்கப்பட்ட பகுதியை எளிய நடையில் மாற்றி அமைக்க.

   இஞ்ஞாலத்தில் மிகப்பழைமையான நிலப்பகுதியென்று தமிழ்வரலாற்றால் அறியப்பட்டதும், நிலநூல், கடல்நூல், உயிர்நூல் ஆராய்ச்சியாளரால் உய்த்துணரப்பட்டதும் மாந்தன் பிறந்தகமென்று மாந்தனூலாராற் கண்டுபிடிக்கப்பட்டதும் தெற்கே இந்து மாவாரியில் மூழ்கிப் போன குமரிக்கண்டம் ஆகும்.

5. 'பஞ்சம்' என்ற தலைப்பில் அமைந்த கருத்துப்படம் மூலம் பாரதி விளக்கும் செய்தி யாது?
6. இந்தியப் பத்திரிகைகளுக்கு நேரு கூறிய அறிவுரை யாது?
7. தமிழ் எழுத்துருக்களில் மாற்றம் தேவை என்பதற்குப் பெரியார் கூறிய காரணங்கள் யாவை?
8. தலையங்கத்தின் இயல்புகளைக் கூறுக.
9. மொழி வளர்ச்சிக்குப் பணியாற்றிய இதழ்களைக் குறிப்பிடுக.
10. நாளிதழ்கள் மக்களை விரைவாகச் சென்றடைய ஜி.கஸ்தூரி பயன்படுத்திய உத்திகள் மூன்றனை எழுதுக.

## நெடுவினா


1. செய்தித்தாளின் மூன்று வகை பக்க அமைப்புகளை விளக்குக.
2. சுதந்தரப் போராட்டத்திற்குத் தமிழ் இதழ்களின் பங்கினை விவரிக்க.
3. இதழ்களின் உருவாக்கம் குறித்து விவரிக்க.
4. 'இதழ்களுடன் ஒரு சந்திப்பு' பகுதியிலிருந்து இதழ்கள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.
5. பருவ இதழ்களிலிருந்து நாளிதழ்களை வேறுபடுத்திக் காட்டுக.
6. சமுதாய முன்னேற்றத்திற்கு இதழ்களின் பங்கினைத் தொகுத்து எழுதுக.
7. ஆதித்தனாரின் எழுத்துநடை பற்றிச் சுஜாதா கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
8. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து விவரிக்க.
9. செய்தித்தாளில் வெளியிடுவதற்குக் கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி, ஒரு விளம்பரம் உருவாக்குக.

   1. மென்பொருள் நிறுவனம் – சென்னை உட்பட நான்கு மாவட்டத்தில் பல்வேறு

   பணிகளுக்கு வேலைவாய்ப்பு – தகுதி, பணியனுபவம் ஆகியவற்றிற்கேற்ற ஊதியம்

# படிப்போம் பயன்படுத்துவோம்

மாதிரி மெய்ப்புத் திருத்தம்


மொழி என்றால் என்ன என்ற வினாவிற்கு அறிந்த கருத்துக்களையும் உணர்ந்த உணர்ச்சிகளையும் பிறருக்கு எடுத்துக்கூற உதவுகின்ற ஒரு கருவி என்பதே விடையாகும் அம்மொழியைப் பேசுகின்றமக்களது

கொள்கைகளையும்கோள்களையும் எடுத்தியம்புவது இலக்கியமாகும். இவற்றினை வைத்து நோக்கும்போது இலக்கியம் இலக்கியம் என்பது

ஒருகாலத்தின் ஒரு சமுமுதாயத்தின் நிலைக் கண்ணாடி என்ற உண்மை புறியவரும்.

இதனாலேயே இலக்கியங்கள் என்பவை வாழ்க்கையின் எதிரொலிகள் சமுதாயத்தின் வளர்ச்சியை காட்டும் மைல்கற்கள் மனித இலட்சியத்தின் உயிர்நாடி என்றெல்லாம் குறிப்பிட ப்படுகிறது

1. *பின்வரும் செய்தியில் உள்ள பிழைகளை அச்சுப்படித் திருத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தித் திருத்துக.*

   *புவனேஸ்வர் ஹாக்கி எங்களுடைய தேசிய விளையாட்டு என்பதை, பெல்ஜியம் அணிக்கு இந்திய ஹாக்கி அணி நிரூபித்துக் காட்டியது. ஹாக்கி விளையாட்டு உலக லீக் பைனல் சின்காலிருதியில் நேற்று இந்தியவீரர்கள் காட்டிய ஆக்ரோஷம், அற்ப்பணிப்பு ராணுவவீரர்களிடம் மட்டுமே பார்க்க முடியும். மைதாணத்தையும், எதிரணியையும் உறையவைத்தது நமதுஅணியின் ஆட்டம் இந்த ஆண்டின் சிரந்த ஆட்டமாக அமைந்துள்ளது. ஹாக்கி உலக லீக்பைனல்ஸ் போட்டிகள் ஒடிசாவின் புவனேஸ்வரில் நடக்கிறது. உலக தரவரிசையில்முதல் 8 இடங்களில் உள்ளஅணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டியில், போட்டியை நடத்தும்நாடு என்ற அடிப்படையில் இந்தியா பங்கேற்றுள்ளது*

2. *பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக.*

   *நிருபர்கள் தங்கள் பகுதிகளில் தினந்தோறும் நடைபெறும் சம்பவங்களைச் சேகரித்துத் தங்களது பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பர். சம்பவங்களோடு சித்திரங்கள், விஞ்ஞான செய்திகள், சர்க்கார் திட்டங்கள் போன்றவைகளும் பத்திரிகையில் இடம்பெறும். எடிட்டர் அச்செய்திகளை அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் எந்த நியூசை எந்தப் பேஜில் பிரசுரிப்பது என்று தீர்மானிப்பார். பிறகு அச்சடிக்கப்பட்ட பத்திரிகைகளை வினியோகஸ்தர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் கொண்டு சென்று விற்பனையாளர்கள் மூலம் வாசகர்களுக்குக் கொண்டு செல்வர்.*



11th Advance Tamil - FINAL.indd 215 14-02-2019 17:28:26

3. சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.

தயிர் தோய்க்கப்பட்டப் பாலில் இரண்டுத் தவளைகள் தவறி விழுந்து விட்டன. அவைகளுக்கு பாத்திரத்தை விட்டு வெளியே வர தெரியவில்லை. முதல் தவளை இதிலிருந்து நான் எப்படித் தப்பிக்கப் போகிறேன் அவ்வளவுதான் என் கதை முடிந்தது என்று புலம்பியது. அதன் கால்கள் சக்தி இழந்தன. சற்று நேரத்திற்கெல்லாம் அது பாலில் மூழ்கி இறந்துப்போனது. இரண்டாவது தவளையோ, தன்னம்பிக்கையோடு சோர்வில்லாமல் கால்களால் உதைத்துக் கொண்டே இருந்தது. இதனால் பால் நன்றாகக் கடையப்பட்ட நிலையை அடைந்தது. வெண்ணெய் திரண்டு மேலே மிதக்க தொடங்கியது. சற்று நேரத்தில் அந்தத் தவளை மிதந்த வெண்ணெயின் மீதேறி நலமாக அமர்ந்து பிறகு ஒரே தாவலில் பாத்திரத்தை விட்டு வெளியேக் குதித்துத் தப்பித்தது.

## செயல்திட்டம்

1. நீங்கள் படித்த ஏதேனும் ஓர் இதழுக்கு வாசகர் கடிதம் எழுதுக.
2. உங்கள் படைப்புகளை நாள், வார, மாத இதழ்களுக்கு எழுதி அனுப்புக.
3. உங்கள் ஊரில் நடைபெற்ற விளையாட்டு விழா நிகழ்வுகளைச் செய்தித்தாளுக்கு அனுப்பும் வகையில் ஒரு செய்தியாக எழுதி வருக.
4. கருத்துச் சித்திரத்திற்கான உங்கள் எண்ணங்களை ஓவியமாகவோ, வரைவதற்கான குறிப்புகளாகவோ தருக.
5. வகுப்புத் தோழர்களுடன் இணைந்து கையெழுத்துப் பிரதி ஒன்றைத் தயாரிக்க.

### மாதிரி கையெழுத்து இதழ்






11th Advance Tamil - FINAL.indd 216 14-02-2019 17:28:26